# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 293 | சனி, ஜூன் 29, 2024 | 15 பக்கங்கள்


## ரணிலின் அறிவிப்புடன் சூடுபிடித்துள்ள அரசியல்

அகிலன்



## இந்து சமுத்திரத்தின் கனிமவளம் இலங்கைக்கு வரமா? சாபமா?

வேல்ஸில் இருந்து அருஸ்





## ஒரு ஜனாதிபதியை வெளியேற்றிய போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்கள் உருவாக்கும் கட்சி



முன்னணி செயற்பாட்டாளர் ரஜீவ்காந்த்


info@ilakku.org

© 2024 இலக்கு இணையம்

# தமிழ் பொதுவேட்பாளர் - மயிலத்தமடு நோக்கி திரும்பிய ரணிலின் கவனம்



மயிலத்தமடு பண்ணையாளர்களின் மேய்ச்சல்தரையை ஒப்படைக்குமாறு இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுக்கு மீண்டும் உத்தரவிட்டுள்ளார். அத்துடன், ஜுலை இரண்டாம் வாரம் மட்டக்களப்புக்கு விஜயம் செய்யும் தருணத்தில் பண்ணையாளர்களை நேரில் சந்தித்து உரையாடுவதற்கும் ஆர்வம் கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி ரணில்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# முல்லைத்தீவு – காணாமல்போனவர்களின் உறவுகளை மிரட்டும் தமிழ் கிராம சேவகர்கள்

முல்லைத்தீவுமாவட்டத்தில் காணாமல் போனோருக்கான (ஓ.எம்.பி)அலுவலகத்தின் நஷ்ட ஈட்டினையும் மரண சான்றிதழினையும் பெற்றுக்கொள்வதற்காக கிராம சேவகர்கள் கிராம அமைப்புக்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை மிரட்டுகின்ற சம்பவம் முல் லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்று வருவதாக முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத் தலைவி ம.ஈஸ்வரி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் ஒன்று புதன் கிழமை(26) முல்லைத் தீவு நகரப் பகுதியில் முன்னெடுக் கப்பட்ட போதுகருத்து தெரிவிக்கையிலேயே இதனை அவர் தெரிவித்துள்ளார்.



முல்லைத்தீவுமாவட்டத்தில் 7 ஆண்டுகளுக்கு மேலாக நீதி கோரி போராட்டம் மேற்கொண்டுவரும் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்று முல்லைத்தீவு நகர சுற்றுவட்டத்தில் நீதிகோரிய கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இதில் கருத்து தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# ஆட்சி மாற்றத்துக்கான முன் தயாரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம் – மனோ

இலங்கை ஐநா வதிவிட பிரதிநிதி மார்க் அந்திரேவிற்கும், தமிழ் முற்போக்கு கூட்டனி தலைவர் மனோ கணேசன் தலைமையிலான தூதுக்குழுவுக்கும் இடையில் தீர்க்கமான சந்திப்பு கடந்த வியாழக்கிழமை(27) கொழும்பில் நிகழ்ந்தது. இதன் போது, தமிழ் முற்போக்கு கூட்டணியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமார் மற்றும் தமுகூ/ஜமமு கேகாலை மாவட்ட அமைப்பாளர் எம். பரணிதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



இந்த சந்திப்பு தொடர்பில் மனோ கணேசன் எம்பி ஊடகங்களுக்கு கருத்து கூறிய போது தெரிவித்தாவது,

நுவரெலியா முதல் கொழும்பு அவிசாவளை உட்பட, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை, கேகாலை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை, குருநாகலை ஆகிய மாவட்டங்களில் பரந்து விரிந்துள்ள பெருந்தோட்ட பிரதேசங்களில், நவீன அடிமைத்துவ அம்சங்களுக்கு மத்தியில், மலையக சமூக குடும்பங்கள் வாழ்கின்றன. இம்மக்களுக்கு பெருந்தோட்ட நிலங்களில், வதி விட காணி உரிமை, வாழ்வாதார காணி உரிமை உள்ளிட்ட உரிமைகளை பெற்று தந்து அவர்களை இந்நாட்டின் முழுமையான பிரஜைகளாக்கும் கொள்கையை தமிழ் முற்போக்கு கூட்டணி முன்னெடுக்கின்றது.

அடுத்து வரும் ஆட்சி மாற்றத்தை அடுத்து, இது ஒட்டு மொத்த பெருந்தோட்ட துறையிலும் முறை மாற்றமாக பரிணமிக்க வேண்டும்.

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# பொலிவியாவில் மேற்கொள்ளப்பட்ட இராணுவப்புரட்சி முறியடிப்பு



லத்தீன் அமெரிக்க நாடான பொலிவியாவில் கடந்த புதன்கிழமை(26) இரவு ஆயுதப் படைகளின் பிரதம தளபதியான ஜெனரல் யுவான் சுனிகா வினால் மேற்கொள்ளப்பட்ட இராணுவப் புரட்சி முறியடிக்கப்பட்டுள் ளதாக அந்த நாட்டின் அரச தலைவர் லுயிஸ் ஆர்சி தெரிவித்துள்ளார்.

இந்த இராணுவப் புரட்சி முறியடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிவியாவின் தலைநகரில் குவிக்கபபட்டடிருந்த இராணுவத்தினர் தமது துருப்புக்காவி வாகனங்களில் அங்கிருந்து சென்றுள்ளனர். அதேசமயம் அரச தலைவருக்கு ஆதரவாக பெருமளவான மக்கள் வீதிகளில் ஒன்று கூடியிருந்தனர்.

முதலில் தலைநகரை முற்றுகையிட்ட புரட்சிப்படையினர் பின்னர் அரச தலைவர் இல்லத்தினுள் உட்செல்ல முயற்சித்திருந்தனர். இந்த நடவடிக்கையை கண்டித்த அரச தலைவர் புரட்சியில் ஈடுபட்ட படைத் தளபதியை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# உணவுக்கான போரை நோக்கி உலகம் செல்கின்றது

பூகோள அரசியல் நெருக்கடி மற்றும் தமது நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டும் என்ற அரசுகளின் நடவடிக்கை போன்றவை உலகத்தை உணவுக்கும், நீருக்குமான போரை நோக்கி மெல்ல மெல்ல நகர்த்தி வருகின்றது என சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட wider Olam Group என்ற நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலகில் 60 நாடுகளில் 22,000 வாடிக்கையாளர்களுக்கு தமது பொருட்களை ஏற்றுமதி செய்து வருகின்றது இந்த நிறுவனம்.



பலபோர்கள்எண்ணைக்காக நிகழ்ந்துள்ளன. ஆனால் எதிர்வரும் காலத்தில் பல போர்கள் நீருக்காகவும், உணவுக்காகவும் நிகழப் போகின்றன என இந்த நிறுவனத்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# ரஸ்யாவின் பக்கம் நிற்கவே இந்தியா விரும்புகின்றது

ரஸ்யாவின் பக்கம் தனது நெருக்கத்தை அதிகரிக்க இந்தியா தற்போது விரும்புவதையே இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் ரஸ்யாவுக்கான அடுத்த மாதப் பயணம் எடுத்துக்காட்டுவதாக இந்திய பிரதமரின் வெளிவிவகாரக்



கொள்கைகளுக்கான சிந்தனைப் பள்ளியாக செயற்படும் Observer Research Foundation என்ற அமைப்பின் ஐரோப்பிய மற்றும் ஆசிய கற்கைகளுக்கான பிரிவின் தலைவர் நந்தன் உன்னிகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த சந்திப்பு அவர்களின் ஒற்றுமையை உலகிற்கு சொல்லப் போகின்றது. அதாவது இரு நாடுகளும் ஒரே பக்கம் என்ற

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# கால்நடைகளுக்கு வரி விதிக்க டென்மார்க் முடிவு

சூழலை மாசுபடுத்தும் அதாவது பூமி வெப்பமடைதலுக்கானவாயுக்களைவெளிவிடுவதால் மாடு பன்றி மற்றும் ஆடு போன்ற கால்நடைகளை வளர்ப்பவர்களுக்கு புதிய வரிகளை விதிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடான டென்மார்க் முடிவு செய்துள்ளது. உலகில் ஒவ்வொரு கால்நடைகளுக்கும் வரி விதிக்கும் முதலாவது நாடாக தற்போது டென்மார்க் காணப்படுகின்றது.



சூழலை மாசுபடுத்தும் வாயுக்களை 70 விகிதத்தால் குறைப்பதற்கு 1990களில் எடுக்கப்பட்ட

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# மதுபானசாலைக்கு எதிரான போராட்டத்தில் மக்களை ஒடுக்கும் அதிகாரம்

## திருமலையான்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலக பகுதியில் உள்ள இருதயபுரம் எனும் கிராமத்தில் மதுபானசாலை திறப்புக்கு எதிரான மக்கள் போராட்டம் இடம் பெற்றது. இருந்த போதிலும் மக்கள் எதிர்ப்பினால் தற்காலிகமாக மூடப்பட்டு மீண்டும் அதனை திறந்ததனால் மக்கள் போராட்டம் வெடித்தது. இருதயபுர கிராமத்தில் மட்டக்களப்பு திருகோணமலை பிரதான வீதியில் இது அமையப் பெற்றுள்ளதுடன் இதனை அண்டி கிறிஸ்தவ தேவாலயமும் காணப் படுகிறது. இது போன்ற அரசாங்கத்தின் அனுமதியால் இது திறக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பு கூறுகின்ற போதும் மதுவால் சமூகத்துக்கும் நாட்டுக்கும் கேடுதான் என்ற நிலையை உணராதவர்கள் அனுமதி பெற்று கொடுத்துள்ளார்கள்.



இங்கு பல மக்கள் கூடி சூழற்சி முறை உண்ணா விரத போராட்டத்தில் ஈடுபட்டனர் 25.06.2024 அன்றைய தினம் பெரும் மக்கள் போராட்டமாக மாறி களவரமாக அமையப் பெற்று இதில் பல்வேறு குற்றசாட்டுக் களை முன்வைத்து மூதூர் பொலிஸாரால் ஆண்கள் பெண்கள் என கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். மாணவ சமூகத்தை பாது காக்கவும் இளைஞர் சமூகத்தை பாதுகாக்கவும் மக்கள் மது பானசாலையை எதிர்க்கிறார்கள்.

மதுபானசாலைக்கான அனுமதியை வழங்கியது யார்? பெரும் பணம் படைத்தவர்கள் இதற்கான அனுமதியை அதிகாரத்தை வைத்து எடுத்திருப்பார்கள் என்ற நிலையில் அதிகாரம் தலைவிரித்தாடுகிறது. குடி குடியை கெடுக்கும் என்பார்கள் மது பாவனை உடல் நலத்துக்கு கேடு என சொல்வார்கள் இப்படியான பல விடயங்களை வைத்து இருதயபுர கிராம மக்கள் போராட்டத்தில் குதித்த போதும் அடாவடித்தனமாக சட்டத்தை வைத்து அப்பாவி மக்களை கைது செய்துள்ளார்கள்.



இச் சம்பவம் தொடர்பான களநிலவரங்களை அறிய திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் களவிஜயம் செய்து மக்களை சந்தித்து அடுத்தகட்ட நடவடிக்கை தொடர் பாக கலந்துரையாடினார்.

குறித்த கவனயீர்ப்பில் மூதூர் பொலிஸாரினால் அன்றைய தினம் (25)கைதான 15 நபர்களும் எதிர்வரும் ஜூலை 3ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் மூதூர் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார். இதில் இலங்கை தமிழ் அரசு கட்சியின் மாவட்ட கிளை தலைவர் சண்முகம் குகதாசன், கிறிஸ்தவ மதத் தலை வர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# ஈழத்தமிழரின் இறைமைக்குரிய நிலத்தைக் கடலை வானை விற்றுப்பிழைக்க முயல்வதைத் தடுக்க பொதுவேட்பாளர் வழியாகிறது

26.06.2024 அன்று பிரான்சின் தலைநகராகிய பாரிஸில் 2.5 பில்லியன் டொலர்களைச் சிறிலங்காவுக்குக் கடனாகக் கொடுத்த யப்பான், சிறிலங்காவின் 2022 ம் ஆண்டு வங்குரோத்து அறிவிப்புக்கு முன்னர் 450 மில்லியன் டொலர்களும் பின்னர் 3.8 பில்லியன் டொலர்களும் சிறிலங்காவுக்குக் கடன் கொடுத்துள்ள இந்தியா, 435 மில்லியன் டொலர்களைச் சிறிலங்காவுக்குக் கடனாகக் கொடுத்துள்ள பிரான்ஸ் ஆகிய நாடுகளின் கூட்டுத்தலைமையில், 435 மில்லியன் டொலர்களைக் கடனாகக் கொடுத்த கொரியாவுடன் 1.2 பில்லியன் டொலர்களைச் சிறிலங்காவுக்குக் கடனாகக் கொடுத்த, பதின்மூன்று நாடுகளான அவுஸ்திரேலியா, ஒஸ்ரியா, பெல்ஜியம், கனடா, டென்மார்க், யேர்மனி, ஹங்கேரி, நெதர்லாந்து, ரஸ்யா, ஸ்பெயின், சுவீடன், பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய நாடுகளும் சேர்ந்து சிறிலங்காவின் 5.9 பில்லியன் டொலர் கடனுக்கு கடன் மறுசீரமைப்புக்கான உடன்படிக்கையில் கையெழுத்திட்டன. வேறுமொழியில் கூறுவதானால் சிறிலங்காவுக்குக் கடன் கொடுத்த மேலே காணப்படும் 17 நாடுகளுடன் சீனாவையும் சேர்ப்பின் 18 உலக நாடுகளுக்கும் சிறிலங்காவின் இறைமை எதோவொரு வகையில் நடைமுறையில் பகிரப்பட்டே கடன் பிடியில் இருந்து தப்பி வாழும் நிலை சிறிலங்காவுக்கு இன்றுள்ளது.

ஈழத்தமிழர்களின் இறைமையை ஒடுக்கக் கடன்வளர்த்த சிங்களத் தலைமைகள் இன்று ஈழத்தமிழர் தாயகத்தையும் சிங்களவர்களின் தாயகத்தையும் நடைமுறையில ஒருங்கே இழந்துவிட்ட அரசியல் எதார்த்தத்தில் வாழ்கின்றன. முக்கியமாக இந்த நாடுகள் எல்லாம் சிறிலங்காவுக்கு கடனில் இருந்து விடுபட உதவவில்லை. தாங்கள் கொடுத்த கடன்களை மீளப்பெறுவதற்கே வழி தேடுகின்றன. இலங்கைத்தீவின் வளத்தையும் இலங்கைத் தீவில் வாழ்கின்ற மக்களின் மனிதவலுவையும் தாங்கள் எவ்வாறு பயன்படுத்தி தாங்கள் கொடுத்த கடனை மீளப்பெறலாம் என்பதே இந்நாடுகளின் உள்நோக்கு. அது இயல்பானதும் கூட. இந்திய வெளிவிவகார அமைச்சு "இந்தியா இணைத்தலைமை வகித்தமையின் ஊடாக சிறிலங்காவின் பொருளாதார உறுதிப்பாடு மீட்சி என்பவற்றுக்கு இந்தியா தனது தொடர்ச்சியான அரப்பணிப்பைச் செய்துள்ளது. அனைத்துலக நாணயநிதியத்துக்கு சிறிலங்கா தொடர்பில் உறுதிப்படுத்தலை வழங்கிய முதலாவது நாடு இந்தியா. அனைத்துலக நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தைப் பாதுகாப்பதற்கு கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை வழிவகுத்துள்ளது" என அறிக்கை வெளியிட்டுள்ளது. அனைத்துலக நாணய நிதியத்தின் இலங்கைக்கான உயர்தூதுக்குழுவின் முதன்மையாளர் பீட்டர் புரூவர் "பொருளாதார மீட்சிக்கான பயணத்தில் முக்கிய மைல் கல்லான கடன் உடன்படிக்கைகளை நிறைவு செய்தல், கடன் மறு சீரமைப்பு, கடன்நிலைத்தன்மையை மீள ஏற்படுத்தல் என்பவற்றுக்கு இது முக்கிய நடவடிக்கை" எனப்பாராட்டியுள்ளார் சுருக்கமாகச் சொன்னால் இந்தியாவோடு இணைந்து அமெரிக்காவும் அதன் மேற்குலக நாடுகளும், ரஸ்யா, கொரியா , யப்பான் போன்ற நாடுகளும் சிறிலங்காவுடன் இந்தக் கடன் மறுசீரமைப்பைச் செய்வதற்கு இந்தியா சிறிலங்காவுக்கு பக்கபலம் அளித்துள்ளது என்பது இந்திய வெளிவிவகார அமைச்சின் அறிக்கையால் உலகுக்குத் தெளிவாக்கப்பட்டுள்ளது. அதே வேளை இந்தக் கூட்டமைப்பில் இடம்பெற மறுத்த சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியுடனான சிறிலங்காவின் கடன் 4.2 பில்லியன் டொலர்களுக்கான கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை சீனாவின் தலைநகரான பெய்ஜிங்கில் 26.06. 2024 இல் கையெழுத்தாகியுள்ளது.

"சிறிலங்காவுக்கு நிதி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துவச் செல்வதற்கும் அனைத்துலக கடன் வழங்குனர்களின் ஆதரவைப் பெறுவதற்கும் முக்கிய காரணியாகக் காணப்பட்ட கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சிறிலங்காவுடன் தற்காலிகமாக உடன்பட்ட முதலாவது தரப்பு சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கி" என சீனாவின் வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார். அத்துடன் சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த மகிந்த ராஜபக்ச சீன கம்யூனிசக்கட்சியின் அமைதியான சகவாழ்வுக்கான ஐந்து கோட்பாடுகள் வெளியான 70வது ஆண்டு விழாவில் கலந்து கொள்வதற்காகச் சீனா அரசின் உத்தியோக பூர்வ அழைப்பில் நான்கு அதிகாரிகளுடன் கடந்த வியாழக்கிழமை சீனாவுக்குப் பயணமானார்.

இவ்வாறு இந்தியாவும். சீனாவும் சிறிலங்காவுடனான தங்கள் கூட்டாண்மைப் போக்கினை கடன் மறுசீரமைப்பு விடயத்தில் கூடத் தெளிவாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் நேரத்தில், சிறிலங்காவின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா கடன் மறுசீரமைப்பு ஏற்பாடுகளைத் தனது ஆட்சிக்காலச் சாதனையாக 26.06. 2024 இல் நாட்டு மக்களுக்கு உரைநிகழ்த்தி சிறிலங்கா ஜனாதிபதி தேர்தலில் தான் வெற்றி பெறுவதே மக்களின் வெற்றி தான் தோற்றால் தான் தோற்க மாட்டார் நாட்டு மக்களே தோற்றுவிடுவர் என்ற மகத்தான செய்தியை வழங்கியுள்ளார். இது குறித்து சிறிலங்காவின் 'த ஐலண்ட்' ஆங்கில நாளிதழ் 27.06. 24 இல் "கொண்டாடப்படும் கடன்" என பொருத்தமான ஆசிரிய தலையங்கத்தை எழுதியுள்ளது. தனியாரிடம் வர்த்தக மற்றும் பிணைமுறிக்கடன்களாக சிறிலங்கா பெற்ற 14.7 பில்லியன் டொலர்களுக்கான கடன் மறுசீரமைப்பு எதுவும் 2022 முதல் இன்றுவரை செய்யப்படவில்லை. அவ்வாறே பல்தரப்புக் கடன்களாக ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் 6 பில்லியன் டொலர்களும் உலக வங்கியிடம் 4379 மில்லியன் டொலர்களும், அனைத்துலக நாணய நிதியத்திடம் 681 மில்லியன் டொலர்களும் பிற வங்கிகளிடம் 491 மில்லியன்களுமென கிட்டத்தட்ட 10.7 பில்லியன் கடன் பெறப்பட்டுள்ளது. குறித்த காலமுறைப்படி மீள்செலுத்தப்பட வேண்டிய இதற்கும் கடன் மறுசீரமைப்பு செய்ய முடியாது. இவற்றை உள்ளடக்கி பலதரப்பட்ட தகவல்கள் தரவுகளுடன் வீரசேகரி தமிழ் நாளிதழில் 27.06.2024இல் றொபேர்ட் அன்ரனி எழுதிய பொருளாதார ஆய்வுக்கட்டுரைக்கு அவர் "சர்வதேச நிதி உதவிக்கான மிக எளிதான பிரவேசம்" எனத் தலைப்பிட்டுள்ளது இந்த கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் ரணிலின் சர்வதேச நிதி உதவிக்கான மிக எளிதான பிரவேசத்துக்கே சிறிலங்காவுக்கு உதவும். இதனால்தான் முன்னர் கடன் தள்ளுபடி வீதம் முதலில் 50 வீதமென எதிர்பார்க்கப்பட்டு பின்னர் 28 வீதமேயென்றாகி தொடர்ந்து அனைத்துலக நாணயநிதிய நடைமுறைகளில் 7 வீதமாகி இப்போது எதுவுமே அது குறித்துப்பேசப்படாத நிலையில் உடன்படிக்கைகள் செய்யப்பட்டுள்ளன என ஐக்கிய மக்கள் சக்தியினர் திறனாய்வு செய்கின்றனர்.

அதே வேளை ரணிலின் அனைத்துலக நிதி உதவிக்கு பிராந்திய மேலாண்மைகளும் உலக வல்லாண்மைகளும் தங்கள் சந்தை மற்றும் இராணுவ நலன்களுக்கு இலங்கைத் தீவைப் பயன்படுத்த அனுமதிப்பதே அவருக்கான ஒரே வழியாக உள்ளது. இதற்கு ரணில் விக்கிரமசிங்க ஈழத்தமிழரின் தாயக நிலப்பரப்புக்களையும் கடல் வளத்தையும் வான்பரப்பையும் அனைத்துலக நாடுகளின் முதலீட்டாளர்களுக்கும் உள்ளூர் முதலீட்டாளர்களுக்கும் விற்றுப் பிழைக்க முயற்சித்து அதற்கு வடக்கு கிழக்கின் பொருளாதார அபிவிருத்தியென்று பெயரிட்டு வருகிறார். இந்நிலையில்தான் ஈழத்தமிழர்கள் ஏமாளிகள் அல்ல எனக் காண்பிப்பதற்காகவே 41 ஈழத்தமிழர்களின் சிவில் அமைப்புக்கள் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தி ஈழத்தமிழர்களுடைய தனித்துவத்தையும் தேவைகளின் வேறுபாட்டையும் அவற்றை உடன் நிறைவேற்ற வேண்டிய அவசியத்தையும் முன்வைக்க முயல்கின்றார்கள். இதனைச் சுமந்திரன் போன்றவர்கள் மக்களின் ஆணை பெற்ற அரசியல்வாதிகள் என்று தங்களுக்குத் தாங்களே மகுடம் சூட்டி மக்களின் இணைப்புத்தான் மக்களின் ஆணையாகிறது என்ற உண்மையை மறந்து சிவில் அமைப்புக்களுக்கு அரசியல் முடிவெடுக்க அனுமதியில்லையென்ற வகையில் ஒன்றுபடும் ஊரை மீளவும் இரண்டுபடுத்த முயல்கின்றனர். இவ்விடத்தில் மக்கள் இறைமை மக்களிடமே உள்ளது. அது தேர்தலில் வெளிப்படுத்தப்பட்டு அவர்களுக்கான பிரதிநிதிகளை அவர்கள் உருவாக்குகின்ற பொழுது அப்பிரதிநிதிகள் மக்களின் ஆணையை முன்னெடுக்கத் தவறுகையில் மக்களே சிவில் அமைப்புக்களை உருவாக்கி மக்களையும் மண்ணையும் பாதுகாக்க வேண்டி வரும் என்பதே இன்றைய உலகில் ஈழத்தமிழர்களிடை மட்டுமல்ல உலகின் பல மக்களிடையிலும் குடிசார் அமைப்புக்கள் எழுச்சியுறுவதன் காரணம் என்பதை இலக்கு தெளிவாக எடுத்துரைக்க விரும்புகிறது.

**ஆசிரியர்**

# ரணிலின் அறிவிப்புடன் சூடுபிடித்துள்ள அரசியல்

அகிலன்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க புதன்கிழமை இரவு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை தான் இந்த வார அரசியலின் பிரதான பேசு பொருள். அந்த உரையை அடிப்படையாகக் கொண்டதாகத் தான் இலங்கை அரசியலின் முக்கிய நகர்வுகள் இடம்பெறுகின்றன. ஜனாதிபதித் தேர்தலில் தான் களம் இறங்கப்போவதாக அவர் வெளிப் படையாகத் தெரிவிக்காத போதிலும், மறை முகமாக அதற்கான அறிவித்தலைத்தான் அவர் வெளியிட்டார் என்று சொல்லாம்.



தவறான பாதையில் செல்வதால் ஏற்படும் ஆபத்துக்களை அனைவரும் அறிந்துவைத்துள்ள தால், அது தொடர்பில் தீர்மானத்தை எடுப்பதற்கு மக்களுக்கு முழு உரிமையும் சுதந்திரமும் இருப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "மக்கள் எடுக்கும் தீர்மானம் ரணில் விக்ரமசிங்கவின் எதிர்காலத்தை தீர்மானிக்காது என்றும் அது நாடு மற்றும் எதிர்கால குழந்தைகளின் எதிர்காலத்தையே தீர்மானிக்கும்" என்றும் தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பொருளாதார நெருக்கடி உச்சத்தை எட்டியதில் இருந்து நாடு எதிர்கொள்ளும் சவால்களை அவரது உரை எடுத்துரைத்தது மற்றும் முக்கியமான அரசியல் மாற்றங்களை முன்னறிவித்தது.

### பொதுஜன பெரமுனவின் ரணிலுக்கான ஆதரவு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) பாராளுமன்ற உறுப்பினர்களுக்குள் ஐக்கியத்தை பேணுவதில் ஜனாதிபதி விக்கிரமசிங்க முதன்மையாக அக்கறை கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பெரமுனவுக்குள் உட்கட்சி பூசல்கள் தொடர்கின்ற போதிலும், இரு பிரிவினரும் ஜனாதிபதியை ஆதரிக்கின்றனர். பெரமுனவின் ஒரு குழு, விக்கிரமசிங்கவின் நிர்வாகப் பாணியை யும், அவரது பொறுப்புக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதையும் பாராட்டுகிறது. அவர்கள் விக்கிரமசிங்கவை ஆதரிக்கிறார்கள். ஆனால் பெரமுன தலைமையுடன் இணைவதில் குறைந்த ஆர்வத்துடன் உள்ளனர். மாறாக, பெரமுனவின் தலைமை ஜனாதிபதியை ஆதரிக்கிறது. ஆனால் கட்சிக்குள் விக்கிரமசிங்கவுக்கான அதிகரித்துவரும் ஆதரவினால் கவலையடைகிறது.

பெரமுனவின் உள்விவகாரங்களில் தலை யிடாமல் முடிந்தவரை பாராளுமன்ற ஆதரவைப் பெற விக்கிரமசிங்க பாடுபடுகிறார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழ் பணியாற்றிய அதே அமைச்சரவையையே அவர் வைத்திருந்தார். மற்றும் பெரமுன ஆதரவின் தேவையை அதன் தலைமை மற்றும் ஆதரவான அமைச்சர்கள் இருவருக்கும் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் உள் சர்ச்சைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என ரணில் எதிர்பார்க்கிறார். மீண்டும் ஜனாதிபதிப் பதவியில் அமர்வதற்கு அது அவசியம் என்று அவர் கருதுகிறார்.

### கட்சித் தாவல்களால் கலங்கும் சஜித்

இதேவேளை, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி (SJB), உயர்மட்ட விலகல் அச்சுறுத்தலை எதிர்கொள்கிறது. முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் இணைய வேண்டும் என்று வாதிடுகின்றனர். ஜனாதிபதியின் பொருளாதார முகாமைத்துவத்தை பாராட்டிய சேனாரத்ன, மீண்டும் சுகாதார அமைச்சராக பணியாற்ற தயாராக இருப்பதாக தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாசவுடன் சமரசம் செய்ய முடியாத கருத்து வேறுபாடுகளை முன்வைத்து தலைமையை கடுமையாக விமர்சித்து வரும் ஐ.ம.க. முக்கியஸ்தரான சரத் பொன்சேகா, மற்றொரு குறிப்பிடத்தக்க வகையில் விலகியவர்.

இந்தக் கட்சித் தாவல்கள் ஐக்கிய மக்கள் சக்தியைப் பலவீனப்படுத்துவதுடன், சஜித் பிரேமதாசாவின் ஜனாதிபதி பிரச்சாரத்தை பாதிக் கும் என்று எதிர்பார்க்கின்றனர். ஒரு முக்கிய ஜனாதிபதி வேட்பாளராக தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் சஜித் பிரேமதாச, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தால் வலுப்படுத்தப்பட்ட அடிமட்ட ஆதரவை நம்பி யிருக்கிறார். அவரது பாராளுமன்ற உறுப்பினர்களில் கணிசமான எண்ணிக்கையில் அரசாங்கத்தில் இணைந்தால், அது அவரது பிரச்சாரத்தை கடுமை யாக குறைமதிப்பிற்கு உட்படுத்தும்.



இதற்கு பதிலடியாக ஐக்கிய மக்கள் சக்தி சுயேச்சையான பெரமுன பாராளுமன்ற உறுப் பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. ஜி.எல். பீரிஸ், நாலக கொடஹேவா மற்றும் டிலான் பெரேரா போன்ற சிலர், பெயரளவுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்துகொண்டே சஜித் பிரேமதாசவுக்கு ஏற்கனவே ஆதரவளித்துள்ளனர். சாத்தியமான புதிய ஆட்சேர்ப்புகளில் டலஸ் அழகப்பெரும மற்றும் தயாசிறி ஜயசேகர அடங்கு வார்கள்.

அதேநேரம், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அணிகளுக்கிடையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) உட்கட்சி அதிகார மோதலில் ஈடுபட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவினரும் கட்சியின் மீது சட்டபூர்வமான கட்டுப்பாட்டைக் கோருவதால் சட்டப் போராட் டங்கள் உருவாகின்றன. அதாவது, அந்தக் கட்சியும் நீதிமன்றத்தில் நிற்கிறது.

தேசிய மக்கள் சக்தி அதன் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தலைமை யில் பேரணிகள் மூலம் ஆதரவைத் திரட்டி வருகிறது. அநுரகுமார கடந்த வாரம் தனது பிரசாரங் களுக்காக மட்டக்களப்புக்குச் சென்றிருந்தார். தமிழ் மக்களுடைய வாக்குகளையும் கணிசமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக வடக்கு, கிழக்கை நோக்கியும் அவரது வருகை இடம் பெறுவதுடன், தமது இறுக்கமான கொள் கைகளிலும் அவர்கள் தளர்வுகளை மேற்கொண்டுள் ளார்கள்.

2024 ஜனாதிபதித் தேர்தலுக்கான கவுன்ட் டவுன் தொடங்கும் வேளையில், அரசியல் கூட்டணிகள் உருவாகி வருகின்றன, முன்னாள் எதிரிகள் சமரசம் செய்து வருகின்றனர், மற்றும் அமைச்சரவை பதவிகளுக்கான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

### தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்போகும் அதிகாரம்

அரசியலமைப்பு ரீதியாக ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பை வழங்குவதற்கு இன்னும் மூன்று வாரங்களில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் கிடைக்கவுள்ள நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பிரசாரத்தை ஆரம்பிக்க பல கட்சிகள் தயாராகியிருக்கின்றன.

எனினும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மீண்டும் தேர்தலில் போட்டி யிடுவாரா என்பதை அறிந்து கொள்வதில் பல கட்சிகள் ஆர்வமாகவுள்ளன. அத்துடன் ரணில் விக்ரமசிங்கவை மீண்டும் போட்டியிட வைப் பதற்கு பல அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து பாரிய திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

புதன்கிழமை இரவு நாட்டு மக்களுக்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவது தொடர் பான அறிவிப்பை வெளியிடுவாரென ஐக்கிய தேசியக் கட்சியினர் பிரசாரங்களை முன்னெடுத்த போதும், கடன் மறுசீரமைப்பு தொடர்பான தகவல்களை மாத்திரம் அவர் வெளியிட்டிருந்தார்.

### ஜனாதிபதியின் அறிவிப்பு 30 இல் வெளியிடப்படும்

இந்நிலையில் பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தி யில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை எதிர்வரும் 30 ஆம் திகதி வெளியிடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்பார்த்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 16ஆம் திகதி அமைச்சர் காஞ்சன விஜேசேகர மாத்தறையில் ராஜபக்ஷ இல்லாத மாபெரும் பேரணியை ஏற்பாடு செய்து ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க வேட்பாளராக போட்டியிடுவதை உத்தியோகபூர்வமாக அறிவிக்க திட்டமிட்டிருந்தார்.

அதற்கு தயாராகும் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மாத்தறை தொகுதி அமைப் பாளர்களுக்கு, அதில் கலந்து கொள்ள வேண்டாம் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எனினும்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

**யெனில் அதற்கான காரணம் என்ன?**

“கோட்டா கோ கம” என்றுதான் நாம் அதனை அடையாளப்படுத்தியிருந்தோம். கோட்டா வீட்டுக்குப் போனால் சரி என்பது ஒரு இடைக்கால நிர்வாக சபை போன்ற ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளை முன்னெடுத்துக்கொண்டிருந்தோம். அதற்கு அனைவரும் சம்மதம் தெரிவித்திருந்த தருணத்தில்தான் ரணில் விக்கிரமசிங்க வந்து அவரது நீண்டநாள்ஜனாதிபதிப் பதவி மீதானஆசையையும்



# ஒரு ஜனாதிபதியை வெளியேற்றிய போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்கள் உருவாக்கும் கட்சி

**இரண்டு வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற "அரகலய" போராட்டத்தில் பங்காளிகளாக இருந்த அமைப்புக்கள் இணைந்து "மக்கள் போராட்ட முன்னணி" என்ற அரசியல் இயக்கத்தை ஆரம்பித்துள்ளன. இதில் முக்கியமான ஒருவராகச் செயற்பட்டுவருபவர் ராஜ்குமார் ரஜீவ்காந்த் மக்கள் போராட்ட முன்னணி ஆரம்பிக்கப்பட்டதன் பின்னணி, எதிர்வரும் தேர்தல்களை அது எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றது? இனநெருக்கடிக்காக அவர்களிடம் உள்ள தீர்வு என்ன? போன்ற விடயங்கள் தொடர்பாக அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**



**அரகலய என்ற மக்கள் போராட்டத்தில் நீங்கள் இணைந்துகொண்டது எதற்காக?**

தொழில் காரணமாகவும் கல்விக்காகவும் நீண்டகாலமாகவே நான் கொழும்புக்கு வந்து செயற்பட வேண்டியிருந்தது. எமது பிரச்சினைகள் குறித்து சிங்கள மக்களுக்கு சரியான முறையில் சொல்லப்படவில்லை. அது இனவாதிகளின் பார்வையில்தான் சொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அவர்களுக்கு எமது பிரச்சினையை மக்களோடு மக்களாக இருந்து வெளிப்படுத்துவதற்கான தளம் ஒன்றை நான் தேடிக்கொண்டிருந்தேன்.

அந்த வகையில் மங்கள சமரவீர அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு இயக்கத்தை ஆரம்பித்திருந்தார். அந்த இயக்கத்தில் இணைந்து சிங்கள மக்களுக்கு தமிழ் மக்களுடைய பிரச்சினைகளைச் சொல்வதற்கான ஒரு வாய்ப்பு கிடைத்தது. அதன்பின்னர் 2022 ஆம் ஆண்டு அரகலய போராட்டம் ஆரம்பமான போது, அந்த இடத்தை நான் ஒரு தளமாகப் பயன் படுத்தி தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை உரையாடிக் கொள்வதற்கான ஒரு தளமாகவும், தமிழ் மக்கள் சார்பாக செயற்படக்கூடிய செயற்பாட்டாளர்கள் பலரையும் இணைக்கக்கூடிய தளமாகவும் நான் அதனைப் பயன்படுத்தினேன்.

**அரகலய போராட்டத்தின் இலக்கு என்னவாக இருந்தது? அதனை உங்களால் அடைய முடிந்ததா? இல்லை**

அதன் அர்த்தமல்ல. அதன்மூலமாக மாபெரும் பொறிமுறை மாற்றம் ஒன்றைத்தான் நாங்கள் வேண்டிநின்றோம். அதற்கான ஆயத்தப்பணிகளும் செய்யப்பட்டிருந்தன. ஆனால், அந்த இலக்கு அடையப்படாமலேயே அந்தப் போராட்டம் வன்முறை பயன்படுத்தப்பட்டு ஆயுதங்களால் அடித்து விரட்டப்பட்டு ரணில் விக்கிரமசிங்கவினால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அதனால், அந்தப் போராட்டம் அதன் இலக்கை அடையவில்லை.

அந்த இலக்கை அடைவதற்காக அதிலிருந்தவர்கள் பலர் சிவில் சமூக அமைப்புக்களை உருவாக்கியிருக்கின்றார்கள். நாங்கள் பலர் மக்கள் பேரவை என்ற அமைப்பை உருவாக்கி நாடு முழுவதும் 34 மக்கள் பேரவைகளை உருவாக்கியிருக்கிறோம். அதன்மூலமாக அன்று நாம் முன்வைத்த அந்தப் போராட்டத்துக்கான அடிப்படைக் காரணங்கள் போன்றவற்றை இன்றும் உயிர்ப்புடன் வைத்திருப்பதற்கும், அந்த போராடும் வர்க்கத்துக்கான ஒரு இணைப்புப் பாலமாக அவற்றை நாம் முன்னெடுக்கிறோம்.

நீங்கள் கேட்ட கேள்விக்கான பதில் அரகலய என்ற போராட்டம் அதன் இலக்கை அடையவில்லை.

**ஆயுத முனையில் அடக்கப்பட்டமையால்தான் உங்களுடைய இலக்கை அடைய முடியாமல் போய்விட்டது எனக் கூறுகின்றீர்களா?**

அன்றிருந்த எதிர்க்கட்சிகளோடு நாம் பேசி

நிறைவேற்றிக்கொண்டு இந்தப் போராட்டத்தை முடக்கினார்.

இந்தப் போராட்டம் முடங்காமல் இருந்தால், இது ஒரு மாபெரும் பொறிமுறை மாற்றத்துக்கான அடிப்படையாக நிச்சயமாக அமைந்திருக்கும். ஏனென்றால், போராட்டம் அதனை நோக்கித்தான் சென்றுகொண்டிருந்தது. அதிலிருந்த எவருக்கும் அதிகாரத்தைக் கைப் பற்றுவதோ பாராளுமன்றத்தைக் கைப்பற்றுவதோ நோக்கமாக இருக்கவில்லை. அதுவொரு ஜனநாயக விரோதச் செயற்பாடு எனக் கருதியதால் அதனை அவர்கள் செய்யவில்லை. இல்லையென்றால், ஆட்சியைக் கூட கைப்பற்றும் அளவுக்கு அவர் களுடைய செல்வாக்கு அன்றிருந்தது.

இவ்வாறு ஆயுதங்களைக் கொண்டு இந்தப் போராட்டம் ஒடுக்கப்படவில்லை என்றால், பொறிமுறை மாற்றம் ஒன்றுக்கான அடிப்படை நிச்சயமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும்.

**பொறிமுறை மாற்றம் என நீங்கள் குறிப்பிடுகின்றீர்கள். நீங்கள் எதிர்பார்த்த அந்த பொறிமுறை மாற்றம் என்ன?**

இன்று நடைமுறையில் இருக்கின்ற அரசியல் முறைமையிலிருந்து எமது நாட்டின் ஒட்டுமொத்தப் பொறிமுறையும் நாட்டின் நலன் சார்ந்து மாற்றமடைய வேண்டும். இப்போதுள்ள முறைமையானது அதிகார வர்க்கத்துக்கு

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# சமூகப் பண்பாட்டுக் கட்டுருவாக்கத்தில் கன்னன்குடா

கிழக்கிலங்கையின் மட்டக்களப்பின் சமூகப் பண்பாட்டுக் கட்டுருவாக்கத்தில் கன்னன்குடா எனும் புராதன ஊரின் வகிபாகம் குறிப்பிடத்தக்கதாக இருக்கிறது.

அதாவது மட்டக்களப்பின் படுவான் கரைப் பிரதேசத்தில் வாழும் சமூகங்களின் கட்டுருவாக்கத்தின் மையமாகக் கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றிசுவரர் கோயில் விளங்கி வருகிறது. இக்கோவிலின் பரிபாலனத்தில் கன்னன்குடாவில் வாழுவோரும் மரபுவழி உரித்துடைமையுடன் முக்கிய பங்காற்றி வருகின்றார்கள்.

தமிழர்தம் வரலாற்றில் பேரரசுகள் உருவாகி அதற்குத் தகுந்தவாறு சமூக, அரசியல், பொருளாதாரக் கட்டமைப்புகளும் பொறிமுறைமைகளும் உருவாக்கப்பட்ட கால கட்டங்களில் கோவில்களை மையப்படுத்தியே இச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.



இந்தவகையில்கிழக்கிலங்கையின்வரலாற்றில் தேசத்துக் கோயில்களை மையமாகக் கொண்டு சமூக, அரசியல், பொருளாதாரக் கட்டமைப்புகள் வகுக்கப்பட்டுள்ள வரலாற்றுப் பின்புலத்தில் படுவான்கரை எனும் பரந்த நிலப்பகுதியின் பண்பாட்டின் மையமாகிய தான்தோன்றீசுவரர் கோயிலின் உரித்துடைமையுள்ள நிருவாகிகளின் ஒரு பகுதியினர் வாழும் ஊர்களுள் ஒன்றாகக் கன்னன்குடா விளங்குவதால் கிழக்கிலங்கையின் பண்டைய சமூகப் பண்பாட்டு உருவாக்கத்துடன் தொடர்புடைய பழம்பெரும் ஊராகக் கன்னன்குடா அதன் வரலாற்று முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது.

இத்தோடு, காலனித்துவக் காலத்தில் மட்டக்களப்பின் நவீன நிருவாக மையமாகப் புலியன்தீவு உருவாகிய போது புலியன்தீவுக்கு மிகவும் அருகில் உள்ள படுவான்கரையின் நுழைவாயிலாகக் கன்னன்குடா விளங்கியுள்ளது.



இதனால் காலனித்துவக் காலத்திலும் கன்னன்குடாவின் முக்கியத்துவம் குறைந்துவிடவில்லை படுவான்கரையின் வளங்களையும், செல்வங்களையும் நகருக்குப் பரிமாற்றம் செய்வதற்கும் நகரிலிருந்து வரும் எழுவான்கரையின் வளங்களையும், செல்வங்களையும் மற்றும் வெளிநாட்டுப் பொருள்களையும் படுவான்கரைக்குப் பரிமாற்றஞ் செய்வதற்குமான வாவிக்கரையினை அண்டிய கேந்திர முக்கியத்துவமுடைய படுவான்கரையின் பழம்பெரும் ஊராகக் கன்னன்குடா திகழ்ந்துள்ளது.



வலையிறவுப் பாலம் அமைக்கப்படும் வரை படுவான்கரைக்கும் மட்டுநகருக்குமான நீர்வழிப்போக்குவரத்து கன்னன்குடா திமிலைதீவுத் துறைகளினூடாகவே நடைபெற்று வந்துள்ளது.

து.கௌரீஸ்வரன்,
விரிவுரையாளர்,
கிழக்கு பல்கலைக்கழகம்

இதனால் மரபுவழிப்பட்ட உள்ளூர் அறிவு முறைமைகளுடன் நவீன அறிவு முறைமைகளையும் உள்வாங்கிக்கொண்ட ஊராகக் கன்னன்குடா மட்டக்களப்பில் முக்கியத்துவம் பெற்றது.



கன்னன்குடாவின் சமூகப் பண்பாட்டு இயக்கத்தின் மையமாக அங்குள்ள கண்ணகியம்மன் கோவில் விளங்கி வருகின்றது.

வவுணதீவுப் பிரதேசத்திலுள்ள பல்வேறு ஊர்களுக்கான தாய் ஊராகவும் கன்னன்குடா உள்ளது.

கன்னன்குடாவின் பொருளாதாரப் பலமாக இவ்வூரின் போடிமார்களின் நெல்லுப் பட்டறைகளில் மிகுந்திருந்த பல்வேறு விதை நெல்லினங்களும் மற்றும் கால்நடைகளும் விளங்கியிருந்தன.

படுவான்கரையின் பரந்த வயல் வெளிகளில் பயிரிடுவதற்கான உள்ளூர் விதை நெல் வகைகளும், நிலத்திற்கு வளமூட்டி நிலத்தைப் பண்படுத்தும் வலுவான உள்ளூர்க் கால்நடைகளும் (எருமை,பசு) கன்னன்குடாவில் தன்னிறைவு பெற்றிருந்தன.

இவற்றைப் பிரயோகிப்பதில் சிறப்புத் தேர்ச்சியும் நிபுணத்துவமுங் கொண்ட விவசாயிகளும், உள்ளூர்வைத்தியர்களும்இவ்வூரின்வளமாக வாழ்ந்தார்கள். இதனால் நவீன விவசாயமும், நவீன நெல்லினங்களும் அறிமுகமாகுவதற்கு முன்னரான காலம் வரை மட்டக்களப்பின் உணவு உற்பத்திக்கான உத்தரவாதத்தை வழங்க வல்ல பொருளாதார வலுக்கொண்ட ஊராகக் கன்னன்குடா முக்கிய பங்காற்றி வந்துள்ளது.



புலியன்தீவு, கோட்டைமுனை, அமிர்தகளி, ஊரணி, கொக்குவில், கல்லடி, காத்தான்குடி முதலான எழுவான்கரையின் பழைமையான ஊரவர்களுக்கும் கன்னன்குடாவில் வாழும் மக்களுக்குமான தொடர்பாடல் கன்னன்குடாவில் தன்னிறைவு பெற்றிருந்த நெல் வளத்தையும் கால்நடைகளின் விளை பொருட்களையும் (பால், தயிர், நெய்) அடிப்படையாகக் கொண்டே இடம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

கன்னன்குடாவின் ஒவ்வொரு வீடுகளிலும் நிறைந்துள்ள நெல்மணிகளும், பாலுந் தயிரும் அவ்வூரிற்கேயுரிய விருந்தோம்பல் பண்பாட்டை உருவாக்கியுள்ளன.

கன்னன்குடாக் கண்ணகியம்மன் சடங்கு விழாவும், ஊரின் கூத்து அரங்கேற்ற விழாக்களும் விருந்தோம்பலுடன் இணைந்ததாகவே இன்று வரை இடம்பெற்று வருகின்றன. இவ்வாறு பல சிறப்புகளையுடைய கன்னன்குடாவில் உள்ளூர்க் கலை மரபுகளில் சிறப்புத் தேர்ச்சி மிக்க

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# லயத்து வாழ்க்கை

துரைசாமி நடராஜா

இலங்கையில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுள் குடியிருப்பு பிரச்சினை மிகவும் முக்கியத்துவம் மிக்கதாக விளங்குகின்றது. இம்மக்களில் பலர் இன்னும் லயத்து வாழ்க்கையை தொடர்கின்ற அதேவேளை இவர்களுக்கான தனிவீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டிய தேவை மேலெழுந்துள்ளது. எனினும் இதற்கான வாக்குறுதிகள் வழங்கப்படும் அளவிற்கு முன்னெடுப்புக்கள் இடம்பெறாது ஆமை வேகத்திலேயே நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்நிலை மாற்றப்பட்டு துரிதகதியில் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இதற்கான ஒத்துழைப்பினை இந்தியா மற்றும் பிரித்தானியா போன்ற நாடுகளும் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்க வேண்டுமென்றும் வலியுறுத்தல்கள் இடம்பெற்று வருகின்றன.



பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் இருந்து அழைத்து வரப்பட்ட தொழிலாளர்கள் உலகின் பல பாகங்களிலும் உள்ள நாடுகளுக்கும் தீவுகளுக்கும் அழைத்துச் சென்று குடியமர்த்தப்பட்டனர். இவ்வாறு குடியமர்த்தப் பட்டவர்களின் வாழ்க்கை சோகம் நிறைந்ததாகவே காணப்பட்டது. இந்த வகையில் 1830 -1909 ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் 250,000 க்கும் அதிகமான தமிழ் தொழிலாளர்கள் மலேசியாவில் கால்பதித்தார்கள். 1830 - 1879 இற்கு இடைப்பட்ட காலப் பகுதியில் கோப்பித் தோட்டங்கள் வளர்ச்சியுற்றபோது இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்கு குடிவந்தனர். 1890 - 1930 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கோப்பித் தோட்டங்களின் வீழ்ச்சியைத் தொடர்ந்து தேயிலைத் தோட்டங்களும் பின்னர் இறப்பர் தோட்டங்களும் வளர்ச்சியடையத் தொடங்கின. இதனால் இந்தியத் தொழிலாளர்களின் வருகையும் அதிகரித்து காணப்பட்டது. 1930 - 1942 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் 4,86,186 பேராக குடிவரவு காணப்பட்டுள்ளது.



இவ்வாறாக நாடுகளிலும் தீவுகளிலும் குடியமர்த்தப்பட்டவர்கள் அடிப்படை வசதிகள் கூட இல்லாத நிலையில் சொல்லொணா துன்ப துயரங்களை அனுபவித்த வரலாறு மிகவும் கசப்பானதாகும். பல்வேறு துறைகளும் பின்தங்கிய நிலையிலேயே காணப்பட்டன. இவற்றுள் குடியிருப்பு நிலைமைகள் அதாவது வீட்டு வசதி குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குகின்றது. இலங்கையின் தேயிலைத் தொழிலின் ஆரம்ப கால முதலாகவே தோட்டத் தொழிலாளர்களின் வீட்டு வசதி மிகவும் தாழ்ந்த நிலையிலும், பின்தங்கியதாகவுமே காணப்பட்டது. தேயிலைத் தொழிலின் இயல்பின் காரணமாக தோட்டத்திலேயே தங்கி வாழும் தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். எனவே தேயிலைத் தோட்ட நிர்வாகம் வேறு வழியின்றி வீடு என்ற பெயரில் ஏதாவது ஒருவகை தங்குமிட வசதிகளை தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் காணப்பட்டது. இந் நிலையில் லயன் வீடுகள் தோற்றம் பெற்றன.

தோட்டத் தொழிலாளர்களின் வீடமைப்பு கருதி பெருந்தோட்டங்களை ஏற்படுத்தியவர்கள் கூடுதலான செலவுசெய்வதற்கு விருப்பமில்லாதிருந்தனர். இதனால் செலவு குறைந்த லயன் வீடுகளை நிர்மாணிப்பதில் இவர்கள் அக்கறை காட்டியதாக தெரியவருகின்றது. இந்நிலையில் 1950 ம் ஆண்டுகளிலேயே இத்தகைய வீடுகளை அமைக்கக் கூடாதென அரசாங்கம் சட்டம் இயற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். வீட்டு வசதிக்காக பெரும் முதலீடு ஒதுக்கப்பட வேண்டும். தொழிலாளர்கள் மீதான மத்தியப்படுத்தப்பட்ட கட்டுப்பாடு தளர்ந்துவிட நேரிடும் என்ற அச்சம் காரணமாக தோட்ட நிர்வாகம் வீட்டு வசதிகளை அபிவிருத்தி செய்வதில் அக்கறை செலுத்தவில்லை.

#### தலையிடாக் கொள்கை



1971 ம் ஆண்டின் சமூக, பொருளாதார அளவீட்டின்படி 85 வீதமான பெருந்தோட்டத் தொழிலாளர் வாழ்ந்த வீடுகளில், 89 வீதமானவை லயன் வீடுகளேயாகும். தோட்ட நிர்வாக அமைப்புக்கள் தமது வருடாந்த வரவுசெலவு திட்டத்தில் உள்ள முதலீட்டு செலவினங்களில் குறைந்தது 10 வீதத்தினை வீட்டு வசதி அபிவிருத்திக்காக ஒதுக்க வேண்டும் என்று 1977 இல் பெருந்தோட்ட மக்களின் வீட்டு வசதி குறித்து ஆராய்ந்த ஆணைக்குழுவின் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டிருந்தது. எனினும் இதன் சாதக விளைவுகள் குறைவாகவே காணப்பட்டன. 1921 மற்றும் 1945 ம் ஆண்டுகளுக்கு இடையே அதிகமான லயன் வீடுகள் நிர்மாணிக்கப்பட்ட நிலையில் இன்றும் சிரமங்களுக்கு மத்தியில் தொழிலாளர்கள் அவ்வீடுகளிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

ஆரம்பகாலத்தில் அரசாங்கம் இம்மக்கள் தொடர்பில் தலையிடாக் கொள்கையையே பின்பற்றி வந்த நிலையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகளை தோட்ட உரிமையாளர்களே செய்து கொடுக்க வேண்டும் என்ற மனப்பான்மையிலேயே இருந்து வந்தது. தொழிலாளர்களின் பின்தங்கிய குடியிருப்பு நிலைமைகள் காரணமாக அவர்கள் பல்வேறு நோய் நொடிகளுக்கும் ஆளாகியமை யாவரும் அறிந்ததாகும். பெருந்தோட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் காடுகளை அழிப்பதில் உதவிபுரிந்த கிராமவாசிகள் சம்பளம் பெற்றுக்கொடுக்கப்படாது ஏமாற்றப்பட்டனர் தொழிலாளர்கள் தமது குறைகளை மேலிடத்துக்கு முறையிட்டபோது அவர்கள் அச்சுறுத்தப்பட்டனர். உடல் நலம் குன்றிய தொழிலாளர்கள் மீது எவ்வித கவனமும் செலுத்தப்படவில்லை. அவர்களை மருத்துவ நிலையங்களுக்கு அனுப்புவதிலும் தோட்ட உரிமையாளர்கள் அக்கறை கொள்ளவில்லை. குடியிருப்பு நிலைமைகளிலும் இத்தகைய பாராமுகமே இருந்து வந்தது.

1996 ம் ஆண்டு தகவலொன்றின்படி இரட்டை லயன் காம்பரா அலகுகள் 104556 காணப்பட்டன. ஒற்றை லயன் காம்பரா அலகுகள் 108825, குடிசைகள் தற்காலிக குடில்கள் 22410, தற்காலிக வீடுகள் 35100 என்றவாறு காணப்பட்டன. தோட்டத்தில் வசிப்பவர்களின் மொத்த அலகுகளாக 301491 காணப்பட்டது. இதனடிப்படையில் பெருந்தோட்ட எல்லைக்குள் 213381 பழைய லயன் முறையை அடிப்படையாகக் கொண்ட வீடுகள் காணப்பட்ட நிலையில் அவை சுமார் 70 வருடங்களுக்கும் முற்பட்டதாகவும் இருந்தது.



பெருந்தோட்ட மக்களின் வீடமைப்பு தொடர்பில் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும், வரவுசெலவு திட்ட முன்மொழிவுகளிலும் பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்தன. 2010 ம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனமான மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு பெருந்தோட்ட மக்களின் வீட்டுப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வைப் பெற்றுக் கொடுக்கப் போவதாக ஆழமாக வலியுறுத்தி இருந்தது. பெருந்தோட்ட மக்களை வீட்டுரிமையுள்ள சமூகமாக மாற்றுதல் தனது பிரதான இலக்காகும் என்று அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். 2015 ம் ஆண்டாகின்றபோது ஒவ்வொரு பெருந்தோட்ட ஊழியரின் குடும்பமும் தற்போது வசிக்கின்ற லயன் வீடுகளுக்கு பதிலாக அடிப்படை வசதிகளுடன் கூடிய புதிய வீடொன்றிற்கு உரிமையுள்ள குடும்பமாக மாற்றுவேன் என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார். எனினும் நாட்டின் ஜனாதிபதியாக அவர் இரண்டு முறை பதவி வகித்த போதும்கூட பெருந்தோட்ட மக்களின் வீடமைப்பு கருதி காத்திரமான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதா? என்பது கேள்விக்குறியேயாகும்.

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# நெருப்புக் குழந்தைகள்

உலக நாடுகள் பலவற்றின் பூகோள,, அபிலாஷைகளையும் உம் வல்லரசுக் கனவுகளையும் சற்றே அசைத்துப்பார்க்கும் வல்லமை பொருந்திய அற்புதமான போராட்ட வடிவமொன்று எங்கள் தாயக பூமியில் கருக் கொண்டு நிமிர்ந்து எழுந்தபோது, மனித குலம் முழுவதுமே தமிழனைப் புருவம் உயர்த்திப் பார்த்தது. பிறந்த மண் மீது கொண்ட ஆழ்ந்த நேசிப்பில், மரணத்தை யாசித்து நின்ற ஒரு போர் வடிவம் அது.

தனியொருவன் பெரும்படையணியாய் எழுகின்ற பேரதிசயம் ஒன்று நிகழ்வதாய், எங்கள் தேசத்தின் பிள்ளைகள் உயிராயுதங்களாக பரிணமித்து நிமிர்ந்தார்கள்.

தங்கள் சாவுக்கான நாளைத் தாங்களே குறிக்கும் புதியதோர் ஆச்சரிய விதி அங்கே எழுதப் பட்டது.

ஒன்றா இரண்டா?

அந்த மகா புருஷர்கள் நிகழ்த்திக் காட்டிய வரலாற்று அதிசயங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனிப் பெருங் காவியம் என்று கூறினால் அது மிகையல்ல. குடும்பம் பாசம், உறவுப் பிணைப்பு, இளமைக் கனவுகள் போன்ற எல்லா நலன்களையும் உதறிவிட்டு விடுதலைக் குறிக்கோளுடன் துறவிகளாய்த் தவமிருந்த எங்கள் தேசப் புதல்வர்களின் பெருமையை வெறுமனே வார்த்தைகளில் அடக்கிவிட முடியாது என்பதைத் தான் வள்ளுவனாரின்,

*"துறந்தார் பெருமை துணைக் கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று"*

என்ற குறள் அழகாகச் சொல்கிறது. ஒவ்வொருதற்கொடைத்தாக்குதல் பற்றியும், அதை நிகழ்த்திய வீரன் / வீராங்கனை பற்றிய விபரமும் வரும் போ தெல்லாம் எனக்குள் ஏற்படுகின்ற சிலிர்ப்பு, வலியுடன் கூடிய இதய நெகிழ்ச்சி., இன்னும் இன்னும்.. யாவுமே வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டவை!

கற்பனைக்கெட்டாத அற்புதங்களை நிகழ்த் திக் காட்டிய இந்த மகா மனிதர்கள் யார்? விடுதலை வேள்வியில் உயிர்ப்பூவை ஆகுதியாக்கும் மந்திரத்தை எப்படிக் கொண்டார்கள் ? எங்கே கற்றுக் கொண்டார்கள்?

வேருக்கு மட்டுமே தெரிந்த விழுதுகளாய் - ஊர் சொல்லாமல், பேர் சொல்லாமல் கண் மூடிக் கிடக்கின்றார்களே எங்கள் தேசத்தின் இன்னும் பல மாவீரக் கண்மணிகள்...

இவர்களெல்லாம் யார்? தேச விடுதலை என்பது உயிரைவிடவும் உயர்வானதொரு உன்னதமா?

இதோ...பாரதிக் கவிஞன் சொல்கிறான்.

*"இதந்தரு மனையின் நீங்கி இடர்மிகு சிறைப்பட்டாலும், பதந்திரு இண்டும் மாறிப் பழி மிகுந்திழிவுற்றாலும் , விதந்தரு கோடி இன்னல் விளைந்தெனை அழித்திட்டாலும், சுதந்திர தேவி! நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே !"*

இந்த வைர வரிகளின் வாழும் சாட்சிகளாக நிமிர்ந்து நின்ற எங்கள் தேசப் புதல்வர்களை- உயிராயுதங்களை - " எழுது !" என்றொரு குரல் அடிக்கடி எனக்குள்ளேயிருந்து ஒலிக்கும்!

எதிரியின் உறக்கம் கலைக் கின்ற பெரு முழக்க மாய், வெடி மருந்தேற்றிய உடலோடு எதிரி நிலைக்குள் புகுந்து, நொடிப் பொழுதில் வெடித்துச் சிதறிப் பெரு வெற்றிகள் ஈட்டுகின்ற இந்த உயிராயுதம்-ராணுவ வல்லுநர் எவரும் கணிப்பிட முடியாத புதிய வியூகம் ! கணித மேதைகளுக்கு தீர்க்க முடியாத சமன்பாடு !இசை வல்லுநர்களுக்கோ புரிந்து கொள்ள முடியாத அபூர்வ ராகம்!

பொழுது சாய்ந்துவிட்டால் இருளுக்கு பயந்து வீட்டுக்கு வெளியே வராதவள், இருளில் ஆழ் கடலில் பல மைல்கள் தூரம் நீந்திக் கடந்து எதிரியின் கப்பலைத் தகர்த்தெறிந்து கடலில் சங்கமம் ஆகி விட்டாள்.!

சாப்பிட்டு விட்டு அம்மாவின் சேலைத் தலைப்பில் வாய் துடைக்கும் பிள்ளை - வெடி மருந்தேற்றிய வாகனத்தில் எதிரியின் நிலை நோக்கிப் போகிறான்!

துணி தோய்க்கவும் ருசியான சாப்பாடு தரவும் அம்மா... பாடங்கள் கற்பிக்க அப்பா... கூடி விளையாட தம்பியும் தங்கையும்.

அன்பான இந்தக் குடும்பத்தை விட்டுப் பிரிந்து போய் - ஒரு இலக்கை எதிப்பார்த்து, தொலை தூரம் ஒன்றில் அவள் அஞ்ஞாதவாசம் செய்கிறாள்..

முதுமையுடன் தனிமையும் சேர்ந்து வாட்டிக் கொண்டிருக்கும் ஒரு ஏழைத்தாய். கடைசி கடைசியாய் அம்மாவைப் பார்த்துப் போக மகன் வருகிறான்.

"சாப்பிடுராசா" என்று சோற்றைக்குழைத்து உருண்டையாக்கி பிள்ளையின் கையில் வைத்த அம்மாவை அவன் நிமிர்ந்து பார்க்கவில்லை. அந்த ஒரே மகன் இனி என்றைக்குமே தன்னைப் பார்க்க வரமாட்டான் என்ற உண்மையையும்,பிள்ளையின் விழியோரங்களில் திரண்ட இரண்டு துளி கண்ணீ ரையும் அந்த ஏழைத் தாய் அறிந்திருக்கவில்லை..

இன்னும் இன்னும்.. இது போன்ற நெகிழ்ச்சியூட்டும் கதைகள் ஆயிரமாயிரம் உண்டு.

தேச விடுதலையின் பால் இவர்களை

தொடர்ச்சி 12ஆம் பக்கம்



# இந்து சமுத்திரத்தின் கனிமவளம் இலங்கைக்கு வரமா? சாபமா?

வேல்ஸில் இருந்து அருஸ்

இந்து சமுத்திரத்தின் மையத்தில் இருக்கும் கோபோல்ட் என்ற கனிம வளத்தை கொண்ட மலையை தமதாக்கிக் கொள்வதில் இந்தியா தீவிரமாக செயற்பட்டு வருகின்றது. ஆனால் அதனை கையகப்படுத்தி அதன் மூலம் தனது நாட்டு மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவும் பூகோள அரசியல் போட்டியில் தன்னை ஒரு பேரம்பேசும் சக்தியாக நிறுத்தவும் இலங்கையும் முற்பட்டுள்ளது.




இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனாவின் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதும் இந்தியாவின் அச்சத்திற்கு காரணம். உலகின் இரண்டாவது மிகப்பெரும் பொருளாதார வல்லரசான சீனா ஏற்கனவே கோபோல்ட் கனிம வளத்தில் முதன்மையான நாடாக உள்ளது. எனவே இந்த வளத்தையும் சீனா கைப்பற்றிவிடுமோ என்ற அச்சம் இந்திய தரப்பை சூழ்ந்துள்ளதாக இந்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மின்சாரக் கார்கள் மற்றும் மின்கலங்களின் தயாரிப்பில் கோபோல்ட் மிக முக்கியமான உலோகம். அதாவது சூழலை மாசுபடுத்தாத எரிபொருட்களை நோக்கி உலகம் நகர்வதற்கு அதன் முக்கியம் முதன்மையானது.

ஜமேக்காவைத் தளமாகக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துலக கடல் படுக்கை அதிகார சபையிடம் (*Jamaica-based International Seabed Authority*) இந்தியா கடந்த ஜனவரி மாதம் இரகசியமாக தனது விண்ணப்பத்தை சமர்ப்பித்திருந்தது. அதாவது *cobalt-rich Afanasy Nikitin Seamount* என்ற கோபோல்ட் மலையை தாம் அகழ்வதற்கான அனுமதி கோரும் விண்ணப்பம் அது.



இந்த மலையானது இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் மையத்தில் உள்ளது. அது மாலைதீவுக்கு கிழக்காக இந்தியக் கரையில் இருந்து 1,350 கி.மீ (850 மைல்கள்) தொலைவிலும் மாலைதீவில் இருந்து 1,100 கி.மீ தொலைவிலும், இலங்கையில் இருந்து 1,050 கி.மீ தொலைவிலும் உள்ளது.

1994 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அனைத்துலககடல்படுக்கைஅதிகார(ISA)சபையானதுகடல் பகுதியில் மேற்கொள்ளப்படும் வர்த்தக மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் சபையாகும். இந்தியா தனது விண்ணப்பத்துடன் 500,000 அமெரிக்க டொலர்களையும் விண்ணப்ப கட்டணமாக செலுத்தியிருந்தது.

எதிர்வரும் 15 வருடங்களுக்கு அந்தப் பகுதியில் தாம் *geophysical, geological, biological, oceanographic and environmental* ஆகிய ஆய்வுகளை செய்யப் போவதாக இந்தியா தனது விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளது. இந்த கனிம மலையானது 150 பகுதிகளாக 3000 சதுர. கி.மீ (1,158 sq miles) பரப்பளவில் பரவிக்கிடக்கின்றது.

ஆனால் இந்தியாவின் விண்ணப்பத்தை ஆய்வு செய்த அதிகார சபை அந்த மலையானது மற்றுமொரு நாட்டின் எல்லைக்குள் வருவதை கண்டறிந்துள்ளது. அதனை இந்தியாவுக்கு தெரிவித்துள்ள அதிகார சபை தனது பதிலில் எந்த நாடு என்பதை தெரிவிக்கவில்லை. ஆனால் அது இலங்கை என்றே அவதானிகள் கருதுகின்றனர்.

ஆனால் இந்த மலைப்பகுதி உள்ள கடல் பிரதேசம் எவ்வாறு இந்தியாவின் கடல் எல்லைக்குள் வரும் என்ற காரணத்தை இந்தியா தரவேண்டும் என தாம் இந்தியாவுக்கு பதில் அனுப்பியதான ஐ.எஸ.ஏ அமைப்பு தெரிவித்துள்ளது. எனினும் இந்த கோரிக்கைக்கு இந்தியா கடந்த மார்ச் மாதம்வரையில் பதில் கொடுக்கவில்லை என அல்ஜசீரா ஊடகம் தெரிவித்துள்ளது.



எனவே தற்போது இந்தியாவின் விண்ணப்பம் நிலுவையில் உள்ளது. இந்தியா ஆதாரங்களைச் சமர்ப்பித்தால் மீண்டும் ஆய்வு செய்யப்படும் என ஐ.எஸ.ஏ தெரிவித்துள்ளது.

ஒரு நாட்டின் பொருளாதார கடல் எல்லை கரையில் இருந்து 200 கடல் மைல்கள்(370km) வரை செல்லும். இந்த எல்லைக்குள் அந்த நாடுகள் தமது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இந்த எல்லைக்குள் ஏனைய நாடுகளின் கப்பல்களும் தடைகள் இன்றி செல்லாம்.

எனினும் தமது எல்லையை 200 கடல் மைல்களுக்கு அப்பாலும் விஸ்தரிக்குமாறு நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் *the United Nations Commission on the Limits of the Continental Shelf (CLCS)* அமைப்பிடம் கேட்கலாம். தமது கடல் எல்லையை 200 கடல் மைல்களுக்கு அப்பால் மிக நீண்ட தூரத்திற்கு அதிகரிக்குமாறு 2009 ஆம் ஆண்டு இலங்கை ஐ.நா அமைப்பான CLCS இடம் விண்ணப்பித்திருந்தது. ஆனால் இது தொடர்பான முடிவை ஐ.நாவின் CLCS அமைப்பு இதுவரையில் மே;றகொள்ளவில்லை. அவ்வாறு மேற்கொண்டால் அந்த கோபோல்ட் மலை இலங்கையின் எல்லைக்குள் வந்துவிடும்.

பல்வேறு நாடுகளின் இவ்வாறான விண்ணப்பங்களை அமைப்பு ஏற்றுக்கொண்டு அனுமதித்திருந்தது. குறிப்பாக அவுஸ்திரேலியா, நோர்வே மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளை இங்கு குறிப்பிடலாம். இந்த நாடுகளில் கடல் எல்லைகள் 200 கடல் மைல்களுக்கு அப்பாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.



இலங்கையின் இந்த விண்ணப்பத்தை மகிந்த ரஜபக்சா இலங்கையின் அரச தலைவராக இருந்தபோது இந்தியா ஆதரித்திருந்தது. ஆனால் 2022 ஆம் ஆண்டு கோத்தபயா ராஜபக்சா பதவியில் இருந்து அகற்றப்பட்டதும் இந்தியா தனது முடிவை மாற்றிகொண்டுவிட்டது. இப்போது இலங்கையின் கடல் எல்லை நீடிப்பு கோரிக்கையானது தனது பாதுகாப்புக்கு ஆபத்தானது என தெரிவித்துள்ள இந்தியா, இலங்கையின் கோரிக்கையை அனுமதிக்க வேண்டாம் என கூறுகின்றது. இந்த மோதல்கள் குறித்து அல்ஜசீரா ஊடகம் இரு நாடுகளையும் தொடர்பு கொண்டபோதும் அவர்கள் அதற்கு பதில் கொடுக்கவில்லை.

இலங்கை தொடர்பில் இந்தியா கவலைப் படுவதில்லை என கடல்சார் சட்டங்கள் தொடர்பான ஆய்வாளர் தெரிவித்துள்ளார். அதாவது இந்தியாவின் கவலை முழுக்க சீனா தொடர்பானது தான். சீனா அந்த இடத்தில் கால்பதிப்பதற்கு முன்னர் தான் கால்பதிக்க வேண்டும் என்பது தான் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



உடனடியாகவே அகழ்வை ஆரம்பிப்பது இந்தியாவின் நோக்கமல்ல அந்த பிராந்தியத்தில் சீனாவுக்கு முன்னர் தனது பிரசன்னத்தை ஏற்படுத்த இந்தியா முற்படுகின்றது. எனினும் சீனா, ஜேர்மனி மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளே இந்து

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# நோர்வே நாட்டின் மொழியும் அரசியலும்

பாகம் 2

நோர்வே என்றாலே நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு, அமைதிக்கான நோபல் பரிசு தரும் நாடு, இயற்கை வழங்கிய கொடையால் மனதைக் கொள்ளை கொள்ளும் அழகோடு மலைகளும், நதிகளும், பனிப்பொழிவுகளும் கொண்ட நாடு, இவையாவும் பலரும் அறிந்த செய்தி!

பிரித்தானிய பேரரசில் சூரியன் மறைவ தில்லை என்பது வரலாற்றின் பிரபலமான வசனம், ஆனால், உண்மையில் நோர்வே நாட்டின் கோடைக்காலம் தான் சூரியன் மறையாதச் சூழலைத் தாங்கியுள்ளது. கோடைக்காலத்தில் 24 மணி நேர வெளிச்சமும் குளிர்காலத்தில் 24 மணி நேர இருட்டும் உடைய நோர்வே, 323,781 சதுரக்கிலோமீட்டர் பரப்பளவோடு, 2020 கணக் கின்படி, 53 லட்சம் மக்கள் கொண்ட நாடு, இதன் தலைநகரமான ஒஸ்லோவில் 12.8 லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். எண்ணெய் மற்றும் இயற்கை வாயு (*Natural gas*) ஏற்றுமதியிலும் கப்பற்கட்டுமானம், சுற்றுலா, மற்றும் மீன்களின் உற்பத்தி, வணிகம் ஏற்றுமதியிலும் நோர்வேயின் பொருளாதாரம் தங்கியுள்ளது. குறிப்பாக, மத்தியக் கிழக்கு நாடு களுக்கு அப்பால், அதிகளவிலான எண்ணெய் மற்றும் இயற்கை வளி உற்பத்தியில் நோர்வேதான் முன்னிலை வகிக்கிறது.



சந்தைப்பொருளாதாரத்தையும் நோர்டிக் சமூகநலக் கோட்ப்பாட்டையும் தாங்கியுள்ள இந்நாட்டின் அடையாளங்களில் ஒன்று இதன் மருத்துவத்துறையின் கட்டமைப்பும், சமூகநலத் திட்டங்களும்.

நோர்வே நாட்டின் அலுவல் மொழிகளாக நோர்வேஜியன் மற்றும் சமி. புதுநோர்வேஜியன் (*Nynorsk*) மற்றும் பூக்மோல் (*Bokmål*) இருவகையான எழுத்துமுறையுண்டு. நீண்ட வருடங்கள் டென் மார்க் கட்டுப்பாட்டில் இருந்தமையால், டேனிஷ் மொழித்தாக்கம் கொண்ட நோர்வேஜிய மொழி மாற்றம் அடைந்தது, அதனையே பூக்மோல் எனச் சொல்கிறார்கள். அதில் இருந்து மீளுருவாக்கம் செய்யப்பட்டதே புதுநோர்வேஜியன் மொழிப் பயன்பாடு! (*ஃபின்னிஷ் மொழியும்-சமி மொழி யும் ஃபின்னோ-யூக்ரிக் மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை!)

நோர்வேயின் கல்வித்துறைப் பற்றிய செய்திகளுக்குச் செல்லும் முன், சிறு வரலாற்றுப் பார்வையையும் தொட்டு வருவோம். இதற்கு அடுத்துப் பார்க்கப்போகிற சுவீடன், டென்மார்க், வரலாற்றுத் தொடர் ஓட்டத்தில் தனியாட்சிகளை கொண்ட நாடுகள், இதற்கும் முன்புப் பார்த்த ஃபின்லாந்தும் தற்பொழுது காண இருக்கிற நோர்வே நாடும் பல நூற்றாண்டுக் காலமாக இன்னொரு ஆட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த நாடுகள்! தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டிருந்த பொழுதும் தங்கள், கல்வி, மொழி, பண்பாட்டினை எங்ஙனம் பாதுக்காத்தார்கள், மீட்டுருவாக்கம் செய்தார்கள் என்பதனை மேலோட்டமாக இந்நூல் தொட்டுச் செல்கிறது!

**நோர்வேஜிய மொழியும் ஸ்காண்டிநேவிய மொழிக்குடும்பமும்:**

நோர்வே மொழி, ஏனைய ஸ்காண்டிநேவியன் மொழிகள் போல, வடக்கு-ஜெர்மானிய மொழிக்குடும்பத்தைச் சார்ந்தவை. கிட்டத்தட்ட ஆறாம் நூற்றாண்டுக் காலத்தில் பொதுவாக பேசப்பட்டுக்கொண்டிருந்த ஸ்காண்டிநேவியன் மொழியில் இருந்து பிறந்து வந்த மொழிகளே வடக்கு ஜெர்மானிய மொழிக்குடும்பம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பத்தின் ஒரு பிரிவான ஜெர்மன், டச்சு, ஆங்கிலம் என்றால், இன்னொரு பிரிவான வடக்கு ஜெர்மானிய மொழிக்குடும்பத்தின் அங்கம் தான் அனைத்து ஸ்காண்டிநேவியன் மொழிகளும், சமி மொழி ஃபின்லாந்து, சுவீடன், நோர்வே நாடுகளின் வடக்கில் இன்று வாழ்ந்துவந்தாலும், அம்மொழி ஸ்காண்டிநேவியன் மொழிக்கூட்டின் நேரடியான உறவுக்கொண்டவையல்ல!



முனைவர் விஜய் அசோகன்,
கல்வியாளர்

பொது ஸ்காண்டிநேவியன் மொழிகளே, அட்லாண்டிக் பெருங்கடலை நோக்கிய நோர்வே, ஐசுலாந்து பகுதிகளில் மேற்கு ஸ்காண்டிநேவியன் உச்சரிப்புகளாகவும் பால்டிக் கடலை நோக்கிய டென்மார்க், சுவீடன் பகுதிகளில் கிழக்கு ஸ்காண்டிநேவியன் உச்சரிப்புகளாகவும் பிரிந்தது. ஆனாலும், இருமொழி உச்சரிப்புகளுக்கும் இடை யிலான மிகச்சிறிய மாறுபாடுகளே இருப்பிரிவு உச்சரிப்புகளுக்கும் இருந்தன. 12ஆம் நூற்றா ண்டிற்கு பிறகு ஐசுலாந்து மொழியும் நோர்வேஜிய மொழியும் மேற்கு ஸ்காண்டிநேவிய உச்சரிப்பில் இருந்தும் டேனிஷ் மொழியும் சுவீடிஷ் மொழியும் கிழக்கு ஸ்காண்டிநேவிய உச்சரிப்பில் இருந்து பெரிய மாற்றம் அடைந்து தனித்துவம் அடைந்தன.

மதங்களும் ஆட்சியாளர்களும்:



தோராயமாக, கி.பி. 800-1050 காலகட்டத் தில் தான், பல்வேறு குறுநில, உள்ளூர் மன்னர்கள் வீழ்த்தப்பட்டு, நோர்வே ஒருமைப்படுத்தப்பட்ட நிலமாக மாறியது. பண்டைய நோர்வேஜிய நம்பிக்கை, பலதரப்பட்டக் கடவுள்கள் மீதான வழிபாடுகளோடு தொடர்புடையவை, அதில் ஏசிர் (*Æsir*) மற்றும் வானிர் (*Vanir*) இருப் பிரிவினைரும் வெவ்வேறு வழிப்பாட்டுப் பின் னணியுடையோராக இருந்தவர்கள் என்றும் தங்க ளுக்குள் இருத்தரப்பும் சமமான படைபலம் உடையவர்கள்தான் என்று நம்பும் காலம் வரை தொடர்ச்சியான போர்களில் மூழ்கியும் இருந்துள்ள னர்.

பண்டைய நோர்சு வழிபாட்டு முறைகளில் கற்றுக்கொடுக்கப்பட்டவை, "தனிமனித சுதந்திர உணர்வு, உள்ளுணர்தல் (*self-reliance*), பற்றுறுதி (*loyalty*), தன்னடக்கம் (*modesty*), விருந்தோம்பல் (*hospitality*), பெருந்தகைமை/தளராத மனப்பான்மை (*generosity*), இரக்கவுணர்வு (*compassion*), தைரியம் (*courage*), அறிவுநுட்பம் (*wisdom*). (*நாம் கேட்டுப்பழகிய பழவும், அறமெனச் சொல்லிக்கொடுக்கப்பட்ட தமிழர் இலக்கியங்களும், முதியோர் சொல்லும் இவையனுத்தும் தானே)



இத்தகைய சூழலுக்குப் பிறகு, நோர்வே மண்ணை, கத்தோலிக்கப் பின்னணியிலான கிருத் துவ மதம் ஆட்கொள்கிறது. கிருத்துவ மதத்தின் ஆக்கிரமிப்பிற்குப் பின்னருமே கூட, பண்டைய நோர்வே வழிப்பாட்டு முறைகள் ரகசியமாகப் பாதுகாக்கப்பட்டும் இருந்துள்ளன. பண்டைய நோர்வே வழிபாடு, அல்லது பண்டைய நோர்சு வழிபாடு (*Old Norse*) என்றும் சொல்லலாம், இதில் முக்கியமான ஒன்று, மூதாதையோர் வழிபாடு. கிருத்துவர்கள் வரும் வரை நோர்சு வழிபாட்டுக்கு என்று தனித்தப் பெயர்கள் இல்லாதச் சூழலில், அந்நிலங்களுக்குள் புகுந்த கிருத்துவத்தை புதிய மதம் என்றும் ஏற்கனவே இருந்த வழிபாட்டு முறைகளை கூட்டாக பண்டைய நோர்சு வழிபாடு என்றும் அழைக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

**டேனிஷ்-நோர்வே, சுவீடிஷ்-நோர்வே:**

நாம் வாழும் காலத்தில் பார்த்த கொள்ளை நோயான கொரொனா பெருந்தொற்றுப் போல, மங்கோலியாவில் தொடங்கி கிரிமியா (*Crimea*) வழியாக, நோர்வேயின் பேர்கன் துறைமுகம் வந்தடைந்த கோமாரி நோய் (*Plague*) தாக்கத்தின் பொழுதும், குறிப்பாக, 1350-1550 காலக்கட்டத்தில் ஸ்காண்டிநேவியன் மொழிகளில் பெரிய மாற்றங் கள் நடைபெறத்தொடங்கியுள்ளது.

இதேகாலக்கட்டத்தில், 13ஆம் நூற்றாண்டு வரை ஸ்காண்டிநேவியன் பகுதிகளில் தனித்த அரசாட்சியை நோர்வே நிறுவி இருந்தபொழுதும், அவ்வப்பொழுது சுவீடன், டென்மார்க் அரசுகளுடனான தொடர் திருமண பந்தத்தினால், 1350களுக்குப் பின்னர், டென்மார்கின் அரசி மார்கெரேட் முயற்சியினால் உருவான கால்மர் ஒன்றியத்தில் (சுவீடன்-டென்மார்க் புரிந்துணர்வு) இணைகிறது. ஸ்காண்டிநேவியன்கூட்டமைப்பின்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## காசா திறந்தவெளி சிறைச்சாலை வீரத்தின் விளைநிலமானதால்

# வேகம் பெறும் உலக ஒழுங்கு (World Order) மாற்றம்

**இறுதிப் பாகம்**

***2023 அக்டோபர் 07 இஸ்ரேல் மக்கள் மீதான படுகொலையும் 08.06.2024 காசாவில் அல் நுசிராத் இனப்படுகொலையும்***

இஸ்ரேலில் நடைபெற்ற இசை விழா ஒன்றில் கலந்துகொண்டோர் மீது 2023 அக்டோபர் 07 திகதி ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலில் உத்தியோகபூர்வ இஸ்ரேலிய புள்ளிவிவரங்களின் அடிப்படையிலும் AFP கணக்கின்படியும் சுமார் 1140 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் - பெண்கள் சிறுவர்கள் உட்பட - பொதுமக்கள். இஸ்ரேலிய சமூக பாதுகாப்பு தரவுகளின்படி இறந்தவர்களில் 700 பேர் இஸ்ரேலிய பொதுமக்கள் 76 பேர் வெளிநாட்டினர். சமீபத்திய இஸ்ரேலிய புள்ளிவிவரங்களின்படி தாக்குதலின் போது சுமார் 250 பணயக்கைதிகளை ஹமாஸ் கைப்பற்றினர். காசாவில் தற்போது 116 பணயக்கைதிகள் இருப்பதாக இஸ்ரேலிய அதிகாரிகள் கூறுகின்றனர். போர் சூழலில் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்துவதும் பணயக்கைதிகளை கொண்டுசெல்வதும் சகஜம்தான். ஆனால் நிராயுதபாணியான அப்பாவி பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தும் மிலேச்சத்தனத்தை எவ்விதத்திலும் நியாயப்படுத்தமுடியாது. 1970 இல் தரவு சேகரிப்பு தொடங்கியதில் இருந்து இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய இத் தாக்குதல் இறப்பு எண்ணிக்கையின் அடிப்படையில் அமெரிக்காவில் 2001ல் இடம்பெற்ற 9/11 தாக்குதல்களுக்கும் இராக்கில் 2014ல் இடம்பெற்ற டிக்ரிட் தாக்குதலுக்கும் அடுத்தபடியாக இடம்பெற்ற மூன்றாவது பாரிய தாக்குதலாகும்.



இதனால் ஹமாசுக்கு எதிராக ஏற்பட்ட உலக அபிப்பிராயத்தை இஸ்ரேல் கட்டவிழ்த்து விட்ட அரச பயங்கரவாதமும் பலஸ்தீன இன ஒழிப்பு நடவடிக்கையும் சீக்கிரமே பின்தள்ளி விட்டது.

இதற்கு முன்னரும் பணயக்கைதிகள் தொடர்பான அனுபவம் இஸ்ரேலுக்கு உண்டு. 25 ஜூன் 2006 ம் திகதி கிலாட் ஷாலித் -Gilad Shalit -என்ற இஸ்ரேலிய இராணுவ கோப்ரல் ஒருவரை ஹமாஸ் பணயக்கைதியாக பிடித்துச்சென்று ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக தனது காவலில் வைத்திருந்தது. இஸ்ரேல் பல தாக்குதல்களை முன்னெடுத்தும் அவரை மீட்க முடியவில்லை. இறுதியாக பேச்சுவார்த்தை மூலம் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக 18 அக்டோபர் 2011 ல் அவர் விடுவிக்கப்பட்டார். இது இஸ்ரேலிய இராணுவத்தின் தோல்வியாகவே உணரப்பட்டது. இத்தடவை 100 கும் அதிகமான இஸ்ரேலிய - அமெரிக்க பணயக்கைதிகளை தம்மிடம் வைத்துள்ள ஹமாஸ், கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக கூடுதலான பேரம் பேசக்கூடிய நிலையில் இருந்தது. இதனை விரும்பாத இஸ்ரேல் - இதனை சாக்காக வைத்து - காசா முழு




வதையும் அமெரிக்காவின் துணையோடு ஆக்கிரமிக்க நினைத்தது. இதனால் இதுவரை மனிதகுலம் கண்டிராத அட்டூழியங்களை காசா மக்கள் அனுபவித்தனர். ஆயினும் அவர்களது மனஉறுதியை அவர்களால் குலைக்க முடியவில்லை. இஸ்ரேல்-அமெரிக்கா இராணுவ வெறியாட்டம் எதிர்பார்த்த பயனைத் தரவில்லை. பணயக்கைதிகளை மீட்கமுடியவில்லை. எனவே அமெரிக்கா ஒரு தந்திரத்தை செய்தது. காசாவுக்கு உணவு உட்பட அத்தியாவசிய பொருட்கள் செல்லும் அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டன. அமெரிக்காவும் அதன் கூட்டாளி நாடுகளும் காசாவுக்காக உலக நிறுவனத்தின் (UNWA) நிவாரணப்பிரிவுக்கு வழங்கும் நிதியை நிறுத்தின. அதே சமயம் இஸ்ரேலுக்கு வழங்கும் ஆயுதங்களையும் உதவித் தொகையையும் அதிகரித்தன.



பி. ஏ. காதர்

**அமெரிக்காவின் நாடகம்**

அமெரிக்கா ஒருபுறத்தில் காசா மக்களை பட்டினி போட்டுக் கொண்டு மறுபுறத்தில் தன்னை ஒரு வள்ளலைப்போல காட்டிக்கொண்டு தந்திரமான ஒரு காரியத்தைச் செய்தது. மனிதாபிமான உதவிகளை தானே நேரடியாக செய்யப்போவதாக கூறிக்கொண்டு மிதக்கும் துறைமுகம் ஒன்றை உருவாக்கி அதனூடாக உணவு பொருட்களை காசா மக்களுக்கு விநியோகிக்கத்தொடங்கியது. இதன் உள் நோக்கம் உளவுபார்ப்பதும் இஸ்ரேலுக்கு பணயக்கைதிகள் இருக்குமிடத்தை கண்டுபிடித்து தகவல்கொடுப்பதும், அவர்களைமீட்கஇஸ்ரேலிய இராணுவத்துக்கு உதவுவதும் தான் என்பதை 08.06.2024 காசாவில் அல் நுசிராத் இனப்படுகொலை உணர்த்தியது. இதன் விளைவாக சுகாதார அமைச்சகத்தின் பதிவுகளின் படி மாத்திரம் 283 பாலஸ்தீனியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 814 பேர் காயம் அடைந்தனர். மலையைக் கெல்லி சுண்டெலியைப்பிடித்தாற்போல நாலு பணயக்கைதிகள் மீட்கப்பட்டனர். 3பணயக் கைதிகள் மாண்டனர். 4 இஸ்ரேலிய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஒரே நாளில் இஸ்ரேலிய இராணுவத்தால் கொல்லப்பட்ட மிகப்பெரிய படுகொலை இதுவாகும். இதற்கெதிராக உலகெங்கும் வெடித்த மக்கள் போராட்டங்களையும் அதனை திசை திருப்புவதற்கு அமெரிக்காவும் ஐ.நா.வும் ஆடிய -ஆடிக் கொண்டிருக்கும் நாடகங்களை இங்கு விபரிக்கப் போவதில்லை.

**காசா ஏன் அமெரிக்காவுக்கு முக்கியம்?**

உண்மையில் இங்கு நடைபெறுவது என்ன? இஸ்ரேலியர்களின் வாழும் உரிமையை நிலை நிறுத்துவதற்காகவா அமெரிக்கா தலைமையிலான மேற்கத்தைய நாடுகள் இஸ்ரேலுக்கு இந்தளவு உதவிகளை செய்கின்றன? நசுக்கப்படும் இனங்கள் உலகில் வேறெந்த நாட்டிலும் இல்லையா?



அமெரிக்காவின் 39வது ஜனாதிபதி (1977 – 1981), ஜிம்மி கார்ட்டர், ஜன. 23, 1980 இல் தனது கூட்டரசுகளின் உரையில் : "எங்கள் நிலைப்பாடு முற்றிலும் தெளிவானது: பாரசீக வளைகுடா பிராந்தியத்தின் மீது எந்தவொரு வெளிசக்தியும் தனது கட்டுப்பாட்டை ஏற்படுத்த மேற்கொள்ளும் எந்த ஒரு முயற்சியும், அமெரிக்காவின் ஜீவாதார நலன்களின் மீதான தாக்குதலாகவே கருதப்படும். அத்தகைய தாக்குதல் இராணுவப் பலம் உட்பட அனைத்து சக்திகளையும் கொண்டு முறியடிக்கப்படும்" என்று கூறினார். மத்தியகிழக்கின் மீது அமெரிக்காவுக்குள்ள பொருளாதார அரசியல் முக்கியத்துவத்தையும் இஸ்ரேல் மீதும் அதற்குள்ள அக்கறையையும் இக்கூற்று உணர்த்துகிறது.

மத்தியகிழக்கு நாடுகளுள் காஸாவின் அமைவிடமும் அதன் வளங்களும் தான் அது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிடியில் அனுபவிக்கும் கொடுமைகளுக்கு பிரதான காரணமாகும். இங்கு1.4ட்ரிலியன்கியூபிக்இயற்கை வாயு 1.5 பில்லி யன் பீப்பாய் பெட்ரோலியமும் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அனைத்துக்கும் மேலாக சூயஸ் கால்வாய்க்கு மாற்றீடாக இஸ்ரேல் உருவாக்க நீண்டகாலமாக திட்டமிட்டுள்ள பென் குரியன் கால்வாய் (Ben Gurion canal) காசா வழியாகத்தான் செல்லவேண்டும். எனவே இதன் பயன் காசாவுக்கு போய்விடும். இதனால் தான் காசா ஏகாதிபத்திய பிசாசின் கோரப்பசிக்கு பலி யாகி வருகிறது.

**முடிவுக்கு வரும் டொலரின் ஆதிக்கம்**

ஏகாதிபத்தியம் அடிக்கடி தன் கால்களில் தானே கல்லைத் தூக்கிப்போட்டுக்கொள்ளும். காசா மீதான போராட்டமும் அமெரிக்காவுக்கு அப்படித் தான் அமைந்துவிட்டது. இஸ்ரேலுடன் சவூதி கத்தார் ஐக்கிய எமிரேட்ஸ் பஹ்ரைன் ஜோர்தான் போன்ற மத்திய கிழக்கு நாடுகளுடன் நல்லுறவை ஏற்படுத்தி அதன் மூலம் தனது செல்வாக்கை பலப்படுத்திக்கொள்ள அமெரிக்கா திட்டமிட்டது. அம்முயற்சியில் வெற்றியும் பெற்றுவந்தது. அதற்கு மற்றுமொரு முக்கிய காரணமும் இருந்தது.

1973 பெற்றோலிய எண்ணெய் நெருக்கடிக்குப் பிறகு 1974 ஜூன் 8ம் திகதி அமெரிக்கா

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## நெருப்புக் ... தொடர்ச்சி ...

ஈர்த்தது எது ? அன்பான- அழகான- உறவுகளையெல்லாம் பிரிந்து ஏன் வந்தார்கள்? தேச விடுதலை வேண்டிப் போரிடும் உந்து சக்தியை அவர்களிடம் தோற்றுவித்த காரணிகள் எவை ? இவ்வாறெல்லாம் சிந்திக்கும் என் மனம், ஒரு தற்கொடைப் போராளியின் இறுதிக் கணங்கள் எப்படி இருக்கும்.. தன் சாவுக்கான நாளைத் தானே குறித்துவிடும் அவன் அந்த இறுதி நாட்களில் என்னவெல்லாம் நினைத்திருப்பான்..? யாரையெல்லாம் நினைத்திருப் பான் ? என்பவை தொடர்பான கற்பனையில் மூழ்கித் தவித்து நெஞ்சம் கனத்துப் போய் இருந்த பொழுதுகளில் எல்லாம், 'சிரித்தபடி கையசைத்துத் தோழர்களிடமிருந்து விடை பெற்றான்' என்றோ, ' விடை பெறும் நேரத்தில் குனிந்து ஒரு பிடி மண்ணை எடுத்துத் தன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டான்.. திரும்பிப் பாராமல் நடந்து தோழர்களின் பார்வையிலிருந்து மறைந்து போனான்' என்றோ குறிப்பிட்ட ஒரு தற்கொடையாளியைப் பற்றி, தாக்குதல் நடந்துமுடிந்த பின் வருகின்ற பதிவுகளைப் பார்த்து மெய் சிலிர்த்துப் போவேன்!

அந்த விடுதலை ஞானிகளின் பெருமை எனக்குள் விஸ்வரூபமெடுத்து என்னைத் திக்குமுக்காட வைக்கும்!.

இது எங்கள் மண்ணின் கதை! 'அவர்களை' எழுதியே ஆக வேண்டும்.' முடிவெடுத்து விட்டேன்.

விடுதலைக்காக எமது இனம் கொடுக்க நேர்ந்த விலையின் துயர் தோய்ந்த பரிமாணங்கள் இவை. போராட்டம் நிறைந்த வாழ்வியல் அனுபவங்களின் வெளிப்பாடு.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் அல்லவா ? ' நெருப்புக் குழந்தைகள் ' என்ற இந்தச் சிறிய நூலின் இலக்கியத் தரத்துக்கு அப்பால், இனி வரும் எமது சந்ததிக்கும் , எதிர்கால உலகுக்கும் அத்தகைய ஒரு ' சோறு' போல இது அமையும் எனில், அதுதான் இந்த நூலின் ஆசிரியர் என்ற வகையில் நான் வேண்டுவது எதிப்பார்ப்பது எல்லாமே.

2012 இல் நான் ஆரம்பித்த இதற்கான தேடல், நத்தை வேகத்தில் நகர்ந்து , 2018 இல் 27 அத்தியாயங்களுடன் நிறைவுபெற்றது. இவற்றை நூல் வடிவில் கொண்டு வரும் முயற்சி, கோவிட் தொற்று, இன்னும் வேறு பல காரணிகளால் தாமதமாகிக் கொண்டே போனது.

இப்போ, 2024 இல் தற்கொடையாளர்களுக்கான விசேட மாதமாகிய யூலையில் 'நெருப்புக் குழந்தைகள் ' என்ற இந்த நூல் லண்டனில் வெளியிடப்பட இருப்பது மகிழ்ச்சி அளிக்கும் செய்தி,

மண் விடுதலை பெறும் என்ற அசையாத நம்பிக்கையோடு மரணத்தைத் தங்கள் தோள்களில் சுமந்து நடந்த எங்கள் தேசப் புதல்வர்களின் தாயகக் கனவை ஈடேற்றி வைக்கும் தார்மீகக் கடமை எங்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு என்ற வரலாற்று யதார்த்ததையும் நாமனைவரும் கருத்தில் கொண்டு அதன்வழி எங்கள் பயணத்தைத் தொடர வேண்டும் என்ற அன்பான கோரிக்கையையும் 'நெருப்புக் குழந்தைகள் ' என்ற இந்தப் படைப்பு முன் வைக்க வேண்டும்.. முன் வைக்கும் - என்று பூரணமாக நம்புகிறேன்.

**நன்றி.**

**நம்பிக்கையோடு, ஆசிரியர்.**

## இந்து சமுத்திர ... தொடர்ச்சி ...

சமுத்திரப் பிராந்தியத்தில் ஆழ்கடல் அகழ்வுகளை மேற்கொள்வதற்கான அனுமதிகள் உண்டு என ஐ.எஸ்.ஏ தெரிவித்துள்ளது.

எந்த ஒரு நாட்டினதும் பொருளாதார எல்லைக்குள் இந்த கோபோல்ட் கனிம மலை இல்லை எனவே இது இந்தியாவின் கோரிக் கைக்கு வலுச்சேர்க்கும் என சென்னையின் கலாநிதி அம்பேத்கார் பல்கலைக்கழகத்தின் சட்டவியல் துறை பேராசிரியர் நிகிலேஸ் நெடுமதுன்மால் தெரிவித்துள்ளார்.

ஆழ்கடல் அகழ்வுத் தொழில்நுட்பத்தில் இந்தியா ஆரம்ப கட்டத்தில் தான் உள்ளது. இன்னும் சில வருடங்களில் அது மேலும் அபிவிருத்தி அடையலாம் என தெரிவித்துள்ளார் திருவனந்தபுரத்தில் உள்ள பூகோள விஞ்ஞான கற்கை நெறிப் பிரிவின் ஓய்வுபெற்ற விஞ்ஞானி கே.வி தோமஸ். இந்தியாவின் விண்ணப்பத்துக்கான முக்கிய காரணம் சீனா தான்.

2021 ஆம் ஆண்டு ஆழ்கடல் அகழ்வுப் பணிகளின் அபிவிருத்திக்காக எதிர்வரும் 5 வருடங்களுக்கு இந்தியா 500 மில்லியன் டொலர்களை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளும் ஆழ்கடல் நீர் மூழ்கி கலங்களை தற்போது தாம் வடிவமைத்துள்ளதாகவும், அதில் பணியாளர்கள் செல்ல முடியும் எனவும் இந்தியா கடந்த 2023 ஆம் ஆண்டு தெரிவித்துள்ளது.

உலகிற்கு தேவையான கனிம வளங்க ளில் தற்போது சீனாவே 70 விகிதமான கோபோல்ட்டையும், 60 வீதமான லிதியம் மற்றும் மங்கனீஸ் ஆகிய இரசாயனப்பொருட்களை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது என அனைத்துலக மீள்ஞருவாக்க சக்தி அமைப்பு தெரிவித்துள்ளது.

எனினும் இந்தியா வளி மாசடைதலை பூச்சிய அளவிற்கு 2070 ஆம் ஆண்டு குறைக்கப் போவதாக தெரிவித்து வருகின்றது. எனவே இந்தியாவின் இந்த திட்டத்திற்கு இந்த கோபோல்ற் கனிம மலை அவசியமானது.

ஆனால் அததற்கு 1100 கி.மீ தொலைவில் உள்ள மாலைதீவும் போட்டிபோடலாம், மாலைதீவை சீனா தனது பிடிக்குள் வைத்திருப்பதால் அது சாத்தியமே. அதேசமயம் இலங்கை அதனை கைப்பற்றினாலும் சீனாவிற்கு தான் அனுகூலமானது.

மேலும் 2022 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு சார்பான கோத்தபாயா ரஜபக்சாவின் அரசை கவிழ்த்து இலங்கையை அமெரிக்கா கைப்பற்றியதற்கான காரணமும் இந்த மலை தான். அதாவது இந்த மாலை இலங்கைக்கு வரமா சாபமா என்பதற்கு காலம் விரைவில் பதில் சொல்லும்.

• • •

## ரஸ்யாவின் ... தொடர்ச்சி ...

செய்தி அது. மூன்றாவது முறை பிரதமராக மோடி பதவியேற்ற பின்னர் இடம்பெறும் முதலாவது ரஸ்யப் பயணம் இது. இரண்டு வருடங்களின் பின்னர் இருவரும் சந்திக்கின்றனர்.

2022 ஆம் ஆண்டு உபகிஸ்தானில் இடம்பெற்ற சங்காய் கூட்டமைப்புக்களின் மாநாட்டில் இருவரும் சந்தித்திருந்தாலும் 2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் தற்போதே மோடி ரஸ்யாவுக்கு செல்கின்றார். ரஸ்யாவின் உறவு இந்தியாவுக்கு மிக மிக முக்கியமானது. வதந்திகளுக்கு அப்பால் இது தான் உண்மையானது.

இரு தலைவர்களினமும் சந்திப்பின் போது படைத்துறை ஒத்துழைப்புக்கள்இ பொருளாதார நலன்கள் மற்றும் நிதி பரிமாற்றம் தொடர்பில் உடன்பாடுகள் எட்டப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் போர் தொடர்பில் ரஸ்யாவை கண்டிக்கும் தீர்மானத்தை அமெரிக்கா ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டுவந்தபோது இந்தியா அதில் கலந்துகொள்ளவில்லை. கடந்த வாரம் சுவிற்சலாந்தில் இடம்பெற்ற உக்ரைன் போர் தொடர்பான அமைதிக்கான மாநாட்டில் கலந்துகொண்ட இந்தியா மேற்குலகம் முன்வைத்த தீர்மானத்தில் கையெழுத்து போடவும் மறுத்திருந்தது.

இந்தியாவின் முக்கிய ஆயுத விநியோகஸ்த்தராக ரஸ்யாவே உள்ளது. கடந்த வருடம் இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகம் 65.7 பில்லியன் டொலர்களாகும். அது 23 விகித அதிகரிப்பாகும்.

## முல்லைத்தீவு ... தொடர்ச்சி ...

சங்கத் தலைவி ம.ஈஸ்வரி, சர்வதேசத்திடம் நீதி கோரி போராட் டங்களை மேற்கொண்டு வருகின்றோம். ஐ.நாசபையில் எங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப் பட்டு வருகின்றது இந்த நிலையில் நீதி கோரி போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றோம். தேடிக்கொண்டிருக்கும் பெற்றோர் இறந்து கொண்டிருக்கின்றார்கள்.

இலங்கையில் ஓ.எம்.பி அலுவலகத்தினால் நஷ்டஈடும் கொடுத்து மரண சான்றிதழும் கொடுக்கும் ஏற்பாடுகள் மக்களை விரட்டி விரட்டி செய்கின்றார்கள். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை தொடர்ச்சியாக கிராம உத்தியோகத்தர் ஊடாகவும் கிராம அமைப்புக்கள் ஊடாகவும் அழுத்தங்கள் கொடுத்து மிரட்டுகின்றார்கள் இந்த பதிவுகள் செய்யாவிடின் எந்த ஒரு அரச உதவிகளும் தரமுடியாது என்று முல்லைத்தீவு மாவட்டத்தில் மிரட்டல் விடுக்கப்படுகின்றது.

இந்த மிரட்டல்களை தாண்டி எமக்கான நீதி கிடைக்க வேண்டும். குற்றவாளிகளை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும் எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று கேட்டுத்தான் தான் நாம் போராடி வருகின்றோம் எமக்கான நீதியினை சர்வதேசம் தான் தரவேண்டும் என்றார்.

## காசா திறந்த ... தொடர்ச்சி ...

சவுதியுடன் செய்துகொண்ட 50 வருட பாதுகாப்பு ஒப்பந்தம் 2024 ஜூன் 9ம் திகதி காலாவதியானது. இவ்வொப்பந்தத்தின்படி சவூதி அமெரிக்க டாலருக்கு மாத்திரமே தனது பெட்ரொல் எண்ணையை ஏனையநாடுகளுக்கு விற்கமுடியும். அதற்குப்பதிலாக அமெரிக்கா சவுதிக்கு பாதுகாப்பு வழங்க இணங்கியது. ஏற்கெனவே ஆகஸ்ட் 15 1971ல் தங்கத்திற்கு நிகராக டொலர் நாணயம் இருக்கும் என்ற ஒப்பந்தத்தை அமெரிக்கா ரத்து செய்வதாக ஜனதிபதி ரிச்சர்ட் நிக்சன் அறிவித்த போது டாலர் ஆட்டம்கண்டது. 1974ல் சவுதியுடன் செய்துகொள்ளப்பட்ட இவ் வொப்பந்தத்தின் பின்னரே அது சர்வதேச நாணயமாக புனர்ஜென்மம் எடுத்தது. அத்துடன் எந்த நட்டினதும் பாரிய அச்சுறுத்தல் இல்லாத சவுதிக்கு பெருமளவில் ஆயுதங்களை விற்று கொழுத்த லாபமீட்டியது. இவ்வொப்பந்தத்தை புதுப்பிக்க அமெரிக்கா பல்வேறு நிர்பந்தங்களை சவுதிக்கு கொடுத்தது. சவூதி அதற்கு இணங்கும் நிலையில் காசா போராட்டம் அதன் மனமாற்றத்துக்கு - ஒரே காரணம் அல்ல- ஒரு காரணமானது.

10.06.2024 ல் ரஷ்யாவில் கூடிய பிரிக்ஸ் BRICS நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாட்டில் இனி டொலரை சர்வதேச நாணயமாக தமக்கிடையே பயன்படுத்திடபோவதில்லை என தீ ர்மானிக்கப்பட்டது. அதற்கு சமாந்தரமாக சவுதி இனி 1974 ஜூன் 8ம் திகதி ஒப்பந்தத்தை புதுப்பிக்கப் போவதில்லை என அறிவித்தது. உக்ரைன்- ரஷ்ய யுத்தம் அமெரிக்கா தலைமையிலான இன்றைய உலக ஒழுங்கை கேள்விக்குறியாக்கிவரும் வேளை யில் காசா போராட்டம் அதன் வீழ்ச்சியை துரிதப் படுத்திவருகிறது.

மற்றும்

## சமூகப் பண் ... தொடர்ச்சி ...

கலைஞர்கள் நிரம்பியுள்ளார்கள்.

கன்னன்குடாவிற்கேயுரிய புலவர் மரபும் தொடர்ந்து வருகிறது. இவ்வூரின் புகழ்பெற்ற புலவராக வாழ்ந்து பல கூத்துகளை கலைமாமணி மா.சிதம்பரப்பிள்ளை அவர்கள் பாடியுள்ளமை பற்றி அறிகிறோம். இப்புலவர் பாரம்பரியத்தில் தற்போது கி.அருளம்பலம் புலவர் அவர்கள் பலகூத்துகளை எழுதி வருவதைக் காண்கிறோம்.

குறிப்பாகத் தென்மோடி, வடமோடி, வசந்தன் முதலான கூத்துகளையும், தோரணம் முதலிய சமுதாயப் பங்குபற்றல் கைவினைக் கலை களையும் செய்வதில் வல்லமையுள்ள கலைஞர்கள் பலர் வாழ்ந்து வருகிறார்கள்.

கிழக்கில் தென்மோடி, வடமோடிக் கூத்துக் கலை மரபினைப் பரவலாக்கிய முதுபெரும் அண்ணாவியாராகக் கண்டறியப்பட்டுள்ள சீனித்தம்பி என்பவரிடம் கூத்தினை முழுமையா கக் கற்றுத் தேர்ந்த மட்டக்களப்புக் கூத்து மரபின் முக்கியமான ஆளுமைகளான மறைந்த நாகமணிப்போடி அண்ணாவியாரும் அவருடைய சகோதரரான நோஞ்சிப்போடி அண்ணாவியாரும் நவீன காலத்திலும் கன்னன் குடாவினுடைய செழுமையான கூத்து மரபினை வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர்களாவர்.

இடர்மிகுந்த போர்க் காலத்திலும் கன்னன் குடாவின் கூத்துமரபினைத் தற்காத்து வளர்த் தெடுத்த அண்ணாவியாராக அமரர் பாலகப்போடி அவர்கள் செயலாற்றியிருந்தார்.

கன்னன்குடாவின் கூத்துப் பண்பாட்டைத் தொடர்ச்சியாக இயங்கச் செய்வ தில் அவ்வூ ரின் மையமாகத் திகழும் கண்ணகியம்மனின் வருடாந்தச் சடங்கு விழா காத்திரமான பங்களி ப்பை நல்கி வருவதனை நாம் கண்டு வருகிறோம். கன்னன்குடாவைப்பொறுத்தமட்டில்கண்ணகியம் மனுக்கான விழா என்பது மட்டக்களப்பு வடமோடி, தென்மோடிக் கூத்து ஆற்றுகைகளுடன் கூடிய தனித்துவமான விழாவாகவே நடைபெற்று வருகிறது எனலாம்.

இத்தோடு கன்னன்குடாவின் கூத்து மரபினை வளர்த்த குறிப்பிடத்தக்க அண்ணாவிமார் களாக திரு பரமக்குட்டி, இயற்கையடைந்த குரு குலன் முதலியோரும் செயலாற்றியுள்ளனர்.

இன்றைய சூழலில் மட்டக்களப்பின் வடமோடி தென்மோடிக் கூத்து மரபில் இயங்கிக் கொண்டிருக்கும் அண்ணாவிமார்களான கதிர்காம நாதன், பசுபதிப்பிள்ளை, சண்முகநாதன், ரெட்ண சிங்கம் முதலியோர் கன்னன்குடாக் கூத்து மரபின் வழி வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தோடு வருங்காலத்தில் அண்ணாவிமார் களாகச் சிறப்புத் தேர்ச்சி பெறத்தக்க இளம் கூத்தர்கள் பலர் கன்னன்குடாவின் கூத்தரங்கில் மத்தளம் வாசிப்பதைக் காண முடிகிறது.

இன்றைய நுகர்வுப் பண்பாட்டு நிலை மைகளுக்கும் இலத்திரனியல் தொடர்பாடல் வளர்ச்சிகளுக்கும் மத்தியில் பலதலைமுறைகளைச் சேர்ந்த அண்ணாவிமார்களையும், சிறப்புத் தேர்ச்சி மிக்க கூத்துக் கலைஞர்களையும் கன்னன் குடாவில் காண்பது கவனத்திற்கும் கற்றலுக்கும் உரியதாகியுள்ளது. குறிப்பாக இளமாணி, முதுமாணி என்று நவீன கல்வியில் தேறிய பட்டதாரிகளான இளம் கூத்தர்களைக் கன்னன் குடாவில் கணிசமாகக் காணலாம்.

அதிபர், ஆசிரியர், அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர் என அரச சேவையிலுள்ள பலரும் சிறந்த கூத்தர்களாக இங்கு கலைப்பணியாற்றி வருகிறார்கள். பட்டதாரிகளான இக்கூத்தர்களில் சிலர் கலைப் பண்பாட்டு ஆய்வாளர்களாகவும் மேற்கிளம்பி வருகிறார்கள்.

இலங்கைக் கிழக்குப்பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையினால் கடந்த இரண்டு தசாப் தங்களுக்கும் மேலாக முன்னெடுக்கப்பட்டு வரும் சமூகப் பங்குபற்றலுடனான கலைப் பண்பாட்டு நடவடிக்கைகளில் கன்னன்குடாக் கூத்துக் கலை ஞர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக இருந் துள்ளது. எடுத்துக்காட்டாகக் களரியமைத்தல், தோரணம் உருவாக்கல், தென்மோடி, வடமோடி முதலான பயிற்சிகளுக்குரிய வளவாளர் களாகக் கன்னன்குடாவின் கலைஞர்கள் பங்களித்துள் ளார்கள்.

இத்தோடு மட்டக்களப்பில் மூன்றாவது கண் நண்பர்கள் குழு முன்னெடுத்துவரும் கூத்து மீளுருவாக்கத்திற்கான செயற்பாடுகளில் கன்னன் குடாவின் அண்ணாவியாரான சி.பாலகப்போடி அவர்கள் முக்கிய பங்களிப்புகளை வழங்கியி ருந்தார். குறிப்பாக வடமோடிக் கூத்தின் கட்ட மைப்பு மற்றும் பறையறைவோன் பாத்திரத்தின் மீளுருவாக்கம் என்பவற்றிற்கான ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும், வழிப்படுத்தல்களையும் வழங்கியிருந்தார்.

2003 ஆம் வருடம் கிழக்குப்பல்கலைக் கழகத்தின் நுண்கலைத்துறை நடத்திய அனைத்து லகச் சமூதாய அரங்க மாநாட்டில் ஒருநாள் நிகழ்ச்சி கன்னன்குடாவில் நடைபெற்றிருந்தது. இதில் கண்காட்சி, கூத்தாற்றுகை என்பன இடம்பெற்றிருந்தன. மரபுவழி விவசாயத்தை மேற்கொள்ளும் பொறிமுறைகள் தொடர்பாகக் கன்னன்குடாவின் ஆளுமைகளினால் செய்யப்பட்ட கண்காட்சியும் அதுதொடர்பிலான அவர்களின் விளக்கங்களும் இம்மாநாட்டில் பங்குபற்றிய ஆய்வறிவாளர்களின் கற்றலுக்கும், கவனத்திற்கும் உரியவையாகியிருந்தன.

இக்கண்காட்சியானது அமரர் சி.பாலகப் போடி அவர்களது இடத்தில் நடைபெற்றிருந்தது. இது படுவான்கரையினுடைய உள்ளூர் அறிவு முறைகளை எடுத்தியம்பவல்ல நூதனசாலை ஒன்றைத்தரிசித்த அனுபவத்தை அதனைப்பார்வை யிட்ட பலருக்கும் வழங்கியிருந்தது.

• • •

## உணவுக்கான ... தொடர்ச்சி ...

தின் பிரதம அதிகாரி சனி வேர்கீஸ் கடந்த புதன்கிழமை(26) தெரி வித்துள்ளார்.

சில நாடுகளால் கொண்டு வரப்படும் பொருளாதார மற்றும் வர்த்தகத் தடைகள் உணவு வினி யோகத்தை கடுமையாக பாதித்து வருகின்றது. பல நாடுகளில் உணவுக் கையிருப்பு குறைந்து வருவதுடன், உணவுப் பொருட்களின் விலைகளும் அதிகரித்து வருகின்றது.

கோவிட்-19 நெருக்கடி காரணமாக உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரித்திருந்தன. அதன் பின்னர் உக்ரைன் போரைத் தொடர்ந்து ரஸ்யா மீது மேற்குலக நாடுகள் கொண்டுவந்த பொருளாதாரத் தடைகள் எரிபொருள் மற்றும் விவசாயத்திற்கான பசளைகள் போன்றவற்றின் வர்த்தகத்தை கடுமையாக பாதித்து வருகின்றது.

பல நாடுகளின் உணவுக் கையிருப்பு குறைந்து வருகின்றது. இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகள் கணிசமான கையிருப்பை கொண்டுள்ளன. 2022 ஆம் ஆண்டில் இருந்து இந்தோனேசியா சமையல் எண்ணையின் ஏற்றுமதியை தடை செய்துள்ளது. இந்தியாவும் சில வகை அரிசிகளின் ஏற்றுமதியை மட்டுப்படுத்தியுள்ளது. எதிர்வரும் நாட்களில் இவ்வாறான பல நிகழ்வுகளை நாம் பார்க்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உலகில் பல மில்லியன் மக்கள் பட்டினியால் இறக்க நேரிடும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் அண்மையில் தெரிவித்திருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தமிழ் பொது ... தொடர்ச்சி ...

தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் சம்பந்தமாக ரணில் செயலணியின் தலைவர் கணபதிப் பிள்ளை மோகன் தெரிவிக்கையில், ரணில் விக்கிரம சிங்க தலைமையில் கடந்த புதன் கிழமை(26) ஜனாதிபதி செயலகத் தில் மட்டக் களப்பு அரசாங்க அதி பர், மகாவலி அதிகார சபையின் அதிகாரிகள், வனத் திணைக்கள அதிகாரிகள்உள்ளிட்டவர்களைச்சந்தித்திருந்தார்.

இதன்போது மயிலத்தமடு பண்ணையா ளர்கள் தமது மேய்ச்சல் தரையை உறுதி செய்யுமாறு தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் போராட்டம் சம்பந்தமாக கவனம் செலுத்தப் பட்டது. பண்ணையாளர்கள் விடுத்துள்ள கோரிக்கை தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டது.

அத்துடன் பண்ணையாளர்களின் கோரிக் கையை நிறைவேற்றுமாறு கடந்த தடவை உத்தரவினைப் பிறப்பித்தபோதும் அது நடை முறையில் செயற்படுத்தப்படாமை தொடர்பி லும் ஜனாதிபதி அதிகாரிகளிடத்தில் கேள்வி எழுப்பியுள்ளதோடு குறித்த விடயத்தியத்துக்கு உரிய தீர்வினை வழங்குவதற்கான நடவடிக் கைகளை தாமதமின்றி மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில் மேய்ச்சல் தரையில் விவ சாயச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாது என்பதும், குடியேற்றங்கள் அகற்றப்படும் என்பதும் அதிகாரிகளால் உறுதிசெய்யப்பட்டுள் ளது.

இதனையடுத்து பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரை விவகாரம் முடிவுக்கு வந்துள் ளதாக ஜனாதிபதி என்னிடத்தில் தொலைபேசி வாயிலாக தெரிவித்ததோடு, ஜூலை இரண்டாம் வாரத்தில் பண்ணையாளர்களை நேரடியாகச் சந்திப்பதற்கும் ஆர்வம் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார் என்றார்.

இலங்கை அரச தலைவர் தேர்தலை புறக்கணித்து தமக்கான தமிழ் வேட்பாளரை நிறுத்துவற்கு தமிழ் மக்கள் தயாராகி வருவதை அடுத்து தற்போது சிங்கள அரசியல்வாதிகளின் கவனம் தமிழ் மக்களின் பிரச்சனைகள் தொடர்பில் திரும்பியுள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## கால்நடை ... தொடர்ச்சி ...

தீர்மானத்தை நிறைவேற்று வதற்காக இந்த வரி நடைமுறைப் படுத்தப்படுவதாக வரிக்கட்டுப் பாடு தொடர்பான அமைச்சர் ஜேப்பி புறூஸ் கடந்த புதன் கிழமை(26) தெரிவித்துள்ளார்.

2030 ஆம் ஆண்டு நடை முறைக்கு வரும் இந்த வரிகள் மூலம் 2045 ஆம் ஆண்டு முற்றாக மாசற்ற சூழலை உருவாக்கப்போவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கால்நடைகள் வெளியிடும் ஒரு தான் கார்பன்டைஒக்சைட்டு என்ற வாயுக்களுக்கு 43 அமெரிக்க டொலர்களை வரியாக அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு பசுமாடு ஆண்டு ஒன்றுக்கு 6 தொன் கார்பன்டைஒக்சைட்டு வாயுவை உற்பத்தி செய்கின்றது. டென்மார்க்கில் 1.5 மில்லியன் மாடுகள் உள்ளதால் இந்த வரி மூலம் அரசு 400 மில்லியன் டொலர்களை ஆண்டுதோறும் சம்பாதிக்க முடியும். மேலும் இந்த வரியை 2035 ஆம் ஆண்டு இரண்டு மடங்காக அதிகரிக்கவும் அரசு திட்டமிட்டுள்ளது.

## ஏட்டுச் சுரை ... தொடர்ச்சி ...

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி போன்ற கட்சிகளும் பெருந்தோட்ட மக்களுக்கு தனி வீட்டுக் கலாசாரத்தை துரிதமாக முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இருந்தன. 200 வருடகாலம் பழைமை வாய்ந்ததும், வாழ்வாதாரத்திற்கு பொருத்த மற்றதுமானலயன் முறை இல்லாதொழிக்கப் பட்டு தனிவீடுகள் சகலருக்கும் அமைத்துக் கொடுக்கப்படும். இத்திட்டம் தோட்டத் தொழிலாளர்களுக்கு முன்னுரிமையானதாக வலியுறுத் தப்பட்டு வருகின்ற அதேவேளை தோட்டங்களில் வாழும் குடியிருப்பாளர்கள் என்ற வகையில் தோட்டத் தொழில் செய்யாதோருக்கும், சிறப்புத் தேவையாளர்களுக்கும் வீடுகள் வழங்கவும், நாட்டின் ஏனைய பிரஜைகளுக்கு வழங்குவது போல் முழு உரிமையுடனான வீடுகளாக அவை அமைய வேண்டுமென்றும் அரசாங்கத்தை தாம் வலியுறுத்துவதாக 2015 ம் ஆண்டு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது. 23 முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாக இத்தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்திருந்தது.

### வாக்குறுதிகள்

இலங்கை அரசாங்கத்தின் வரவுசெலவு திட்ட முன்மொழிவுகளில் பெரும்பாலும் பெருந்தோட்ட மக்களின் வீடமைப்பு தொடர்பான முன்மொழிவுகள் உள்ளடங்கி இருந்தன. பெருந்தோட்ட மக்களுக்கு 25,000 வீடுகள் அமை த்துக் கொடுக்கப்படும், 50,000 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் என்று கவர்ச்சிகரமான வாக்குறுதிகள் முன்மொழிவு களில் வழங்கப்பட்டன. எனினும் இவையனைத்தும் 'ஏட்டுச் சுரைக்காய்' ஆகியிருந்தது. வீடமைப்பு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் வாக்குறுதிகளால் மட்டுமே திருப்திப்படுத்தப்படும் ஒரு சமூகமாக மலையக சமூகம் தொடர்ச்சியாக இருந்து வருகின்றது. பெரும்பான்மை அரசியல் வாதிகளும் கூட இதனை பல சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இலங்கையின் வீடமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் நாம் பேசுகின்றபோது முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவை புறந்தள்ளிவிட முடியாது. அவரின் காலத்திலேயே இலங்கையில் வீடமைப்புத் திட்டம் பிரபல்யமடைந்தது. கிராம எழுச்சி வீடமைப்பு திட்டம், ஒரு இலட்சம் வீடமைப்பு திட்டம்,பத்து இலட்சம் வீடமைப்பு திட்டம் என்றெல்லாம் வீடமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இவரது காலப்பகுதியிலேயே சர்வதேச வீடமைப்பு ஆண்டு 1987 இல் பிரகடனப்படுத்தப்பட்டது. கிராம மக்களின் வீடமைப்பு தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில்முழுமூச்சுடன்செயற்பட்டபிரேமதாசா பெருந்தோட்ட மக்களின் வீடமைப்பு குறித்து உரிய கரிசனையை வெளிப்படுத்தவில்லை. 1980 களில் தேர்தல் தொகுதிக்கு 100 வீடுகள் என்ற திட்டத்தின் கீழ் கொட்டகலை, சௌமியபுரத்தில் 20 வீடுகளும், ஹட்டன், வெளிஓயா, மாணிக்கவத்தையில் 20 வீடுகளுமாக மொத்தம் 40 வீடுகளே தோட்டங்களுக்கு வெளியே தனித்தனி வீடுகளாகக் கட்டப்பட்டது. இதுவும் அமரர் தொண்டமானின் வேண்டுகோளுக்கமையவே கட்டப்பட்டதாக தெரிய வருகின்றது. எனவே பெருந்தோட்ட வீடமைப்பு தொடர்பில் பிரேமதாசா மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே செயற்பட்டிருக்கின்றார்.

பெருந்தோட்ட மக்கள் லயத்து வாழ்க்கையில் பல்வேறு சிரமங்களையும், சவால்களையும் எதிர்நோக்கி வருகின்றனர். கலாசார மற்றும் சுகாதார சீர்கேடுகள் அதிகமாக இடம்பெறும் நிலையில் இளவயது திருமணங்கள் அதிகரிப்பதற்கும் இது உந்து சக்தியாகியுள்ளதாகியுள்ளது. மலையக சமூகம் கல்விமையச் சமூகமாக மேலெழும்ப வேண்டிய நிலையில் மாணவர்களின் கல்வியுரிமை பறிபோவதற்கும் லயத்து வாழ்க்கை காரணமாகி இருக்கின்றது. பெருந்தோட்ட மக்களின் வீடமைப்பு தொடர்பில் இந்தியா அவ்வப்போது உதவிகளை வழங்கி வருகின்றது. எனினும் இது 'யானைப்பசிக்கு சோளப்பொறியைப் போன்றதாகும். இந்நிலையில் இந்தியா வீடமைப்பிற்கான உதவிகளை மேலும் விரிவுபடுத்த வேண்டிய தேவையுள்ளது. இதேவேளை இந்திய வம்சாவளி மக்களை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்து வந்தவர்கள் என்ற ரீதியில் பிரித்தானியாவுக்கும் பெருந்தோட்ட மக்களுக்கான வீடமைப்பிற்கு உதவும் கடப்பாடு உள்ளது. இதிலிருந்தும் அவர்கள் விலகிச்செல்ல முற்படுதல் கூடாது.



மலையக மக்களுக்கான காணியுரிமையையும் வீட்டுரிமையையும் நிலைநாட்ட அவர்கள் காணியில்லா, வீடில்லா சமூகமாக தொடர்ந்தும் வாழாதிருக்க மலையக தமிழ் மக்களின் காணி, வீட்டுரிமை தொடர்பாக ஒரு தேசியக் கொள்கை வகுக்கப்பட வேண்டும். நடைமுறையிலுள்ள பல்வேறு வகையான வீடமைப்புத் திட்டங்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு இணைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அரசசார்பற்ற நிறுவனங்கள் பெருந்தோட்ட மக்களின் வீடமைப்பு கருதி அதிகரித்த உதவிகளை வழங்க முற்படுதல் வேண்டும். தனித்தனி வீடுகளைக் கட்டுவதற்கு முன்னுரிமையளித்து வீடமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். தேவையான சந்தர்ப்பத்தில் தேவையான இடங்களில் மாத்திரமே மாடிவீடமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று புத்திஜீவிகள் பரிந்துரைத்துள்ள நிலையில் இதுகுறித்து விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். இதேவேளை மலையக அரசியல் தொழிற்சங்கவாதிகள் தமது பேதங்களை மறந்து வீடமைப்பு தேவையை சாதகமாக்கிக்கொள்ள ஐக்கியத்துடன் குரல் கொடுக்க வேண்டியதும் அவசியமாகும்.

## பொலிவியாவில் ... தொடர்ச்சி ...

உடனடியாக பதவியில் இருந்து அகற்றிய பின்னர் அவரின் இடத் திற்கு ஜெனரல் வில்சன் சன்ஜ்சே என்பவரை நியமித்துள்ளார்.

ஜெனரல் சுனிகா கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரக்கு உதவியாக இருந்த வான் படைத் தளபதியான ஜெனரல் மார்சிலோ செகொரா மற்றும் கடற்படைத் தளபதியான அட்மிரல் யூவான் சல்வடோர் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் பலர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

பொலிவியா அதிபர் அண்மையில் ரஸ்யாவுக்கு சென்று ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டினை சந்தித்ததும், பொலிவியா பிறிக்ஸ் என்ற அமைப்பில் இணைவதற்கான விருப்பத்தை இந்த மாதம் வெளியிட்டதும் இந்த இராணுவப்புரட்சிக்கான பின்னனிக் காரணிகளாக இருக்கலாம் என தெரிவிக்கப் படுகின்றது.

மின்சாரக வாகனங்களுக்கு தேவையான மின்கலங்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும் லிதியம் என்ற உலோகத்தின் உலகின் தேவையின் 24 விகிதத்தை பொலிவியா கொண்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஆட்சி மாற்ற ... தொடர்ச்சி ...

அதற்கான முன் தயாரிப்பு பணிகளில் நாம் இன்று ஈடுபட்டுள் ளோம். இந்த விவகாரங்கள தொடர்பான உள்நாட்டு அரசியல் சட்டவாக்க நடவடிக்கைளை தமிழ் முற்போக்கு கூட்டணி மேற்கொள் ளும். அதற்கான பலம் மற்றும் தூரப்பார்வை எம்மிடம் உள்ளது. அடுத்த ஆட்சி மாற்றத்துக்கு உள்ளே சென்று திட்டங்களை வகுப்பதை விட, முன்கூட்டியே முன் தயாரிப்பு நடவடிக்கைகளில் தற்போது நாம் ஈடுபட்டுள்ளோம்.

இந்த விவகாரம் தொடர்பில் மலையக சிவில் சமூகத்துட னும் நாம் தற்போது கலந்து உரை யாடுகிறோம். மக்கள் ஆணை கொண்ட அரசியல் பிரநிதிகளுடன் இணைந்து பணியாற்ற கூடிய மலையக சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் பற்றியும் நாம் வெகு விரைவில் சர்வதேச சமூகத்துக்கு அறிவிப்போம் எனவும், ஐநா நிறுவனங்களான உணவு விவசாய நிறுவனம், யுனிசெப், உலக உணவு நிறுவனம் ஆகியவை ஊடாக எமக்கு தொழில்நுட்ப, அபிவிருத்தி, ஒத்துழைப்புகளை வழங்க ஐநா முன் வர வேண்டும் என்ற கோரிக்கையையும், நாம் இலங்கை ஐநா வதிவிட பிரதிநிதி மார்க் அந்திரேயிடம் முன் வைத்துள்ளோம். எமது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட இலங்கை ஐநா வதிவிட பிரதிநிதி ஆவன செய்வதாக உறுதி அளித்தார்.



### ஒரு ஜனாதிபதி ... தொடர்ச்சி ...

சார்பாகவும், அடித்தட்டு மக்களுக்கு விரோத மாகவும், இனவாதத்தை மேலும் வலுப் படுத்தும் ஒரு அமைப்பு முறையாகவும்தான் இருக்கின்றது. அரதிகார வர்க்கத்துக்கு சார்பாக இருக்கக்கூடிய இந்த அமைப்பு முறையில் பாரிய மாற்றம் ஒன்று எழவேண்டும். இதே பொறிமுறைக்குள் சிக்குப்பட்டிருந்தமையால்தான் கடந்த 75 வருடங்களாகச் சிக்குப்பட்டு இந்த நாட்டை முன்னேற்ற முடியாது இருந்தது என்பதை அடையாளம் கண்டிருந்தோம். எனவே அதற்கு மாற்றீடான பொறிமுறை குறித்து நாங்கள் தீரக் கலந்தாலோசித்து, இன்றிருக்கக்கூடிய ஊழல் நிறைந்த இந்தப் பொறிமுறை, மீண்டும் மீண்டும் ஒரே நபர்கள் ஆட்சிக் கதிரையில் அமரக்கூடிய இந்தப் பொறிமுறையை மாற்றுவதற்கான ஆரம்பகட்ட பூர்வாங்க விடயங்களை நாங்கள் கலந்துரையாடிக்கொண்டிருந்த சமயத்தில் தான் இந்தப் பிரச்சினை வந்தது. பொரு ளாதார, சமூக ரீதியான ஒரு மாற்றத்தை இலக்காகக் கொண்டதாகவே எமது பொறிமுறை இருந்தது.

**இந்த அரகலய போராட்டத்தில் தமிழ் மக்களுடைய பங்கு பெருமளவுக்கு இருக்கவில்லை. இதற்கு காரணம் என்ன?**

சிங்கள மக்களுக்கு இது முதலாவது போராட்டமாக இருக்கலாம். ஆனால், தமிழ் மக்கள் நீண்டகாலமாகவே போராடி வருகின்றார் கள். அவர்களுடைய போராட்டங்கள் எதுவும் அதிக்கப்படவில்லை. அந்தப் போராட்டத்துக் கான சரியான பதில்கள் வழங்கப்பட வில்லை. தமிழ் மக்களுடைய அரசியல் போராட்டங்கள் அனைத்துமே நசுக்கப்பட்டிருக் கின்றது. ஆயுதப் போராட்டம் மிகவும் கொடூர மான முறையில் முடித்து வைக்கப்பட்டது. தமிழ் மக்கள் நீண்டகாலமாக நீதி கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு எந்தவிதமான பதிலும் இல்லை.

எனவே இத்தனை விதமான போராட்டங் களையும் மதிக்காத இந்த அரசைக் கேள்வி கேட்காதவர்கள் தங்களுக்கு பொருளாதாரப் பிரச்சினை, உணவுப் பிரச்சினை வந்திருப்பதால் வீதிக்கு வந்திருக்கின்றார்கள். எனவே, நாங்கம் எந்த அடிப்படையில் அவர்களுக்கு உதவுவது? அவர்கள் எங்களுடைய போராட்டத்தை மதிக்கவில்லை. எனவே நாம் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவளிக்க முடியாது என்ற ஒரு அரசியல் முடிவை தமிழ் மக்கள் எடுத்தார்கள். இது சரியானதொரு முடிவாகத்தான் நான் பார்க்கின்றேன்.

நான், அங்கு சென்றதற்கான காரணம் வேறு. நான் தெற்கிலிருந்து வடக்கு கிழக்குக்கு உதவக்கூடிய ஒரு அமைப்பைத்தான் நான் வைத்திருக்கிறேன். எனவே தமிழ் மக்களுடைய அரசிலைக் கொண்டு செல்லும் பணிக்கு நான் இதனைப் பயன்படுத்தினேன். ஆனால், தமிழ் மக்கள் இதனை நிராகரித்தது சரியானது என்ற கருத்தைத்தான் நான் அன்று முதல் கூறிவருகிறேன்.

**அரகலய இன்று மக்கள் போராட்ட முன்னணி என்ற பெயரில் ஒரு அரசியல் இயக்கமாக மாறியிருக்கின்றது. இந்த மாற்றத்துக்கு என்ன காரணம்?**

இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் வரும்போது நாம் சில விடயங்களை எதிர் பார்த்துக் காத்திருந்தோம். இன நெருக்கடி தொடர்பாக பிரதான வேட்பாளர்கள் ஆரோக்கி யமான பதில்களைத் தருவார்கள் என்று எதிர் பார்த்திருந்தோம். அதில் யாரும் பொருத்தமான பதில்களைத் தரவில்லை. இதனால், இரண்டு தீர்மானங்களை நாம் இறுதியாக எடுத்திருந்தோம். ஒன்று-இந்த ஜனாதிபதித் தேர்தலை நாங்கள் முற்றாகப் புறக்கணிக்க வேண்டும். இதனைப் புறக்கணித்துவிட்டு பொருத்தமான ஒரு ஜனாதிபதி வரும் வரையில் அழுத்தத்தைக் கொடுக்கும் ஒரு அணியாக இருப்போம் என்பதுதான் எமது முடி வாக இருந்தது.

ஆனால், பலருடைய ஆதங்கத்தின்படி என்ன காரணத்துக்காக இதனை நாம் புறக்கணிக் கிறோம் என்பதைச் சொல்வதற்கு வேட்பாளர் ஒருவரை நாம் நிறுத்த வேண்டியிருந்தது. இது வேண்டாம் என்று சொல்வதற்கு நாம் புறக் கணிப்பைச் செய்யலாம். எது வேண்டும் என்று சொல்வதற்கு நாம் ஒரு வேட்பாளரை நிறுத்த வேண்டும். அந்தக் கொள்கைகளை ஒரு பிரசாரத்தின் மூலமாகக் கொண்டு செல்ல வேண்டிய தேவை இருப்பதை உணர்ந்து ஒரு வேட்பாளரை நிறுத்துவதற்காகத்தான் இந்த அமைப்பை உருவாக்கியிருக்கிறோம். இந்தக் கூட்டணி நான்கு கட்சிகள் மற்றும் 20 க்கும் அதிகமான சிவில் சமூக அமைப்புக்களுடனும் இணைந்து உருவாக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான கொள்கைகள் தீர்க்கமான உரையாடல்கள் மூலமாக உருவாக்கப்பட்டிருக் கின்றது. நான்கு தேசிய இனங்களை அங்கீகரித்து, சுயாட்சியை அங்கீகரிக்கின்ற ஒரு தேர்தல் விஞ் ஞாபனத்துடன் களமிறங்கப்போகின்ற ஒரே அமைப்பு இந்த அமைப்பாகத்தான் இருக்கும்.

• • •

### மதுபானசாலை... தொடர்ச்சி ...

மக்களுக்கான முன்னுரிமைகளை அர சாங்கம் வழங்கி குறித்த மதுபானசாலையை மூட வேண்டும் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்பதே மக்கள் கோரிக் கையாக உள்ளது ஆனாலும் போராட்டத் தின் போது 15 நபர்களை கைது செய்துள் ளார்கள் இந்த கைது தொடர்பில் இதன் எதிர்ப்புக்கள் பற்றியும் நாடாளுமன்றிலும் வெளியிலும் மக்கள் பிரதிநிதிகளால் பேசப்பட்டாலும் அது வெற்றியடைய வில்லை அதிகார துஷ்பிரயோகம் மூலமாக எதையும் செய்யலாம் சாதிக்கலாம் என்ற மன நிலை காணப்படுகிறது. அனுமதியின்றி ஒன்று கூடியமை, பொலிஸாரை தாக்கியமை, அமைதியின்மையை ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச் சாட்டுக்களை முன்வைத்து 15 நபர்கள் கைது செய்யப்பட்டார்கள். இக் குறித்த போராட் டத்தில் பொலிஸார் ஒருவர் உட்பட சாதாரண பெண்ணும் காயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மது பாவனை மூலமாக குடும்ப வன் முறை, சிறுவர் துஷ்பிரயோகம் உள்ளிட்ட பல பாதக விளைவு களை சந்திக்க நேரிடுகிறது இதனை பொருட்படுத்தாது சமுதாயத்தை அழிக் கும் செயலாகவும் காணப்படுகிறது.

மது வீட்டுக்கும் நாட்டுக்கும் கேடு என்ற நிலையை அறிந்து மதுபானசாலையை நிறந்தரமாக மூடுமாறும் மக்கள் கோரிக்கையாக உள்ளது.

### நோர்வே... தொடர்ச்சி ...

வரலாறும் இங்கிருந்து தொடங்குகிறது எனலாம். நோர்வேயின் மன்னர் 6 ஆம் ஆக்கோன் *(King Haakon VI)* அவர்களை திருமணம் புரிந்ததால், டென்மார்க் அரசி ஏற்கனவே நோர்வேக்கான அரசாட்சி தலைவியாகவும் மாறியிருந்தார். 1536 வரை தன்னாட்சி உரிமையோடு இருந்த நோர்வே, அதன்பிறகு, முழுமையான டென்மார்க் கின் அரசியல் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவரப் பட்டிருந்தன. கால்மர் ஒன்றியமும் வீழ்ச்சியடைந் திருந்தக் காலம் இது.

நோர்வேஜியத் தன்னாட்சி உரிமை முழுவதும் டென்மார்க் அரசின் கட்டுப்பாட்டிற்கு வந்த காலகட்டத்தில், கத்தோலிக்க மதப்பிரிவில் இருந்து மார்டின் லூதர் அறிமுகப்படுத்திய லூதர் கோட்பாடுகளுக்கு *(Lutheranism)* டென்மார்க்-நோர்வே மாறுகிறது. அடுத்ததாக, பழைய நோர்வேஜிய மொழி மெல்ல மெல்ல உருமாறியது, டேனீஷ் மொழியால் ஆக்கிரமிக்கப்பட்ட நோர்வேஜிய மொழியாகி, கலவையான மொழி உச்சரிப்புகள் பிறந்தன. அதன்பின்பும் நோர்வேயின் மேற்குக் கரைகளிலும் பல்வேறு மலைகிராமங்களிலும் பழமையான நோர்வேஜிய மொழியின் அடிப்படை உச்சரிப்புகளோ மக்கள் பேசிவந்தனர்.

டேனீஷ் மையப்படுத்தப்பட்ட நோர்வே ஜிய மொழியான கலவை மொழி உச்சரிப்புகளை நீக்கும் நடவடிக்கைத் தொடங்கியபொழுது, பழமைய நோர்வேஜிய மொழி உச்சரிப்புகள் பேசிய மக்களிடம் இருந்து நவீனகால நோர்வேஜிய மொழியை மீட்டெடுத்தனர். மீட்டுருவாக்கம் அடைந்தப்பின், இன்றைய நோர்வேயின் தென் மேற்குக்கரை முழுவதும் உள்ள மக்கள் பேசுவது புதுநோர்வேஜிய மொழி எனப்படுகிறது. நோர்வே தலைநகர் ஒஸ்லோ ஒட்டிய பகுதியின் பெரும்பான்மை மக்கள் இன்றளவும் பூக்மோலே பேசுகின்றனர்.

1814இல், நோர்வே தனித்த அரசியல மைப்பை உருவாக்கிக் கொண்டது, எனினும் சுவீடன் அரசின் கட்டுப்பாட்டில் இருந்த தன்னாட்சி அரசாக நோர்வே அடுத்த நூறாண்டு களுக்குத் தொடர்ந்தது. 1880ற்கு பிறகு, நோர் வேயின் நாடாளுமன்ற அதிகாரத்தை சுவீடன் அரசர் ஏற்றுக்கொண்டப் பிறகு, வெளியுறவுக் கொள்கை தவிர்த்து அனைத்தும் நோர்வே அரசியல் கட்டுப்பாட்டிற்கு வந்தடைந்தது. 1905 முதல் நோர்வே நாடு, முழுமையானத் தனிநாடாக மாறியது.

நாம் முன்பகுதியில் பார்த்த, டென்மார்கு டனான இணைவிற்கு முன்பிருந்த (கி.பி.1350) மன்னர் 6 ஆம் ஆக்கோன் பெயரின் தொடர்ச்சியாக நோர்வேயின் 7 ஆம் ஆக்கோன் *(King Haakon VII)* என 1905இல் பெயரை மாற்றிக்கொண்டு, பிரித்தானிய மன்னர் குடும்பத்தின் உறவினரான, டென்மார்கின் இளவரசர் கார்ல் *(Prince Carl)* நோர்வே நாட்டின் மன்னராக அவ்வாண்டு பதவியேற்றுக்கொண்டார்.

(*சேர, சோழ, பாண்டியர்கள் போல தொடர்ச்சியாக தங்களுக்குள் மாறி மாறி திருமணம் முடித்தவர்கள் ஸ்காண்டிநேவியன் அரசக் குடும் பத்தினரும்).

**தொடரும்**

### ரணிலின்... தொடர்ச்சி ...

பல்வேறு காரணங்களால் கடந்த 16ஆம் திகதி கூட்டத்தை நடத்த முடியாத நிலையில், அது காணி உறுதி வழங்கும் நிகழ்வாக மாற்றப்பட்டது. பின்னர் அந்த நிகழ்வும் ஒத்திவைக்கப்பட்டது.

தற்போது எதிர்வரும் 30ஆம் திகதி ஜனாதிபதி பங்கேற்கும் பத்திரம் வழங்கும் நிகழ்ச்சி மாத்தறையில் நடைபெறவுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை உத்தியோகபூர்வமாக அறிவிக்க ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக தற்போது தகவல் கள் வெளியாகியுள்ளன.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.